www.tamilarangam.net

# சமர்

இதழ் - 2



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளே :


1. உங்களுடன் சமர்

2. 3 வது நிலை பற்றி ...

3. மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கை

4. நான் தண்டனை கோருகின்றேன்

5. ராஜீவின் கொலை

6. பெண்.

7. மீண்டும் எழுந்திருக்கையில் -------

8 ஒரு நினைவுத்தென்றல் -----

9. ஸ்டாலினும் ரசிய புரட்சியும்

10 மாபெரும் விவாதத்திலிருந்து -----

11 முதலாளித்துவத்தின் பெரும் தோல்வி! ----

12 வைரமணியின் கவிதைகள்.

13. TENT CITY 1991

14. தேச விடுதலைப் போராட்டமும் தேசிய சக்திகளும்.

www.tamilarangam.net

யுத்தகால
இரவொன்றின் நெருக்குதல்

மொத்தத்தில்
எல்லோரும் அவசரமாயுள்ளனர்.
என்னிடம்,
ஞாபகங்கள் மட்டும் எஞ்சியுள்ளன.

வெளியே,
பதற்றமற்று மௌனமாய் நிற்கும்
மரங்களின் நிழல்கள்
கீழே கிழிந்து போயுள்ளன.


தெருவில்
அவலமும் பதற்றமுமாய்
நாய்கள் குலைக்கும் போது
பூட்டப்பட்ட கதவுகளை
மீண்டும் ஒருமுறை சரிபார்த்துவிட்டு
எல்லோரும் தூங்கப் போகும் நேரத்தில்
நான்,
நாளைக்குத் தோன்றுகிற சூரியன் பற்றி
எண்ணமுடியாது.

இரவு எனக்கு முக்கியமானது:
நேற்றுப்போல்,
மீண்டும் ஒரு நண்பன் தொலைந்து போகக் கூடிய
இந்த இருட்டு.
எனக்கு மிகவும் பெறுமதியானது.

சிவரமணி

நன்றி : சரிநிகர்

www.tamilarangam.net



www.tamilarangam.net

# தேசவிடுதலைப் போராட்டமும் தேசிய சக்திகளும்

(சமர் 1இல் 'தேச விடுதலைப் போராட்டமும் தேசிய சக்திகளும்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை விவாதத்திற்கு முன் வைத்திருந்தோம். இது தொடர்பாக ஆரோக்கியமான கருத்து விவாதங்கள் எதுவும் நேரடியாக எமக்கு முன்வைக்கப்படவில்லை! ஆனால் 'தூண்டில்' 'மனிதம்' ஆகியவற்றில் வெவ்வேறு நோக்கு நிலைகளிலிருந்து கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. சமரன் வெளியீடான கட்டுரை ஒன்றை அடுத்த காலடி என்ற பெயரில் லண்டனிலிருந்து வெளியிட்டிருந்தனர். இவற்றைத் தொட்டு நாம் எமது கருத்துக்களை முன் வைக்கிறோம்)

1983ம் ஆண்டு யூலை இனக்கலவரத்திற்குப் பிறகு பாய்ச்சல் நிலை வளர்ச்சியை எடுத்த தமிழீழப்போராட்டமானது, சிறிலங்கா அரசுக்கெதிரான எதிர்ப்பு யுத்தம் என்ற நிலையைக் கூட இழந்து முற்றாக சீரழிக்கப்பட்டு விட்டது. ஈழத்தில் எழுந்த இந்தப் போராட்டத்தின் வீச்சு தென்னாசியப் பிராந்தியம் முழுவதையுமே பாதிப்புக்குள்ளாக்க வல்லது எனக் கருதப்பட்டது. ஆனால், தென்னாசியப் பிராந்தியத்தில் வல்லாதிக்க சக்திகளினதும், சர்வதேசப் பயங்கரவாதிகளதும் ஊடுருவலுக்கு இந்தப் போராட்டம் வழி செய்து கொடுத்திருக்கிறது. இனிமேலும் ஈழத்தில் நடத்தப்படும் 'தேசவிடுதலைச் சண்டைக்கு' முற்போக்குச் சாயம் பூசி நியாயப்படுத்த முயல்வதும், இது தொடர்பான சரியான நிலையினை எடுக்கத் தவறுவதும் தெற்காசியப் பிராந்தியத்தின் தேசங்களின் விடுதலைக்குச் செய்யப்படும் துரோகத்தனமாகும். ஆந்திரா, ஜம்முகாஷ்மீர், பாக்கிஸ்தான் போன்ற தேசங்களில் LTTE பாணி தாக்குதல் அலைவீசிக் கொண்டிருக்கிறது. சிங்கள தேசத்திலும் இந்த அலை ஓயவில்லை!

இந்த நிலையில் சமூக உணர்வுள்ள அனைத்து சக்திகளும் ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டிய தேவை உணரப்படவேண்டும்.

தேசிய எழுச்சிகளாலும், ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களாலும், உலகெங்கும் நடக்கும் புரட்சிகளாலும் தமது தொடர்ச்சியான இருப்புத் தொடர்பாக அச்சங்கொண்ட ஏகாதிபத்தியங்கள், இவ்விதமான போராட்டங்களை திசை திருப்பி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதனூடாக, தனது இருப்பை நிலைநிறுத்த வழி செய்து கொள்கிறது. இந்த நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் வெற்றியடைந்த ஒரு புரட்சியின் அமைப்பாளனும், சிந்தனையாளனும், ஏகாதிபத்தியத்தின் அரசியல் இராணுவபலம் இன்றளவு வளர்ச்சிபெறாத சூழலில் "ஒரு ஏகாதிபத்திய நாட்டிற்கெதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தை இன்னுமொரு பெரிய வல்லரசு தனது சொந்த ஏகாதிபத்திய நோக்கங்களுக்காக குறிப்பிடத்தக்க சூழ்நிலைகளில் பயன் படுத்திக் கொள்ளக் கூடும்" என்று மிகவும் தீர்க்கமாக குறிப்பிடுகிறார். இங்கே நாம் ஒரு தே.வி போராட்டம் ஏகாதிபத்தியத்தினால் அதன்

www.tamilarangam.net

நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படுகிறதா? அல்லது தனது சொந்த தேசிய நலன்களுக்கானதா? என்பது குறித்து ஆராயும் போது நிலவும் குறிப்பான சூழ்நிலைகளில் போராட்டத்தின் தன்மை பற்றியும், அப்போராட்டத்தின் பின்னாலுள்ளசமூக சக்திகள் பற்றிய ஆய்விலும் இருந்தே முடிபுக்கு வரமுடியும். 1905 ஆம் ஆண்டு சுவீடனிலிருந்து நோர்வே பிரிந்து போனதை அங்கீகரித்த மேற்குறித்த சிந்தனையாளன் பின்வருமாறு குறிப்பிடுகிறார். நோர்வேக்கு மிக விரிவான சுயநிர்வாக உரிமை கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அது தனக்கே சொந்தமான பாராளுமன்றம் முதலியவற்றைப் பெற்றிருந்த போதி லும், கூட்டுச் சேர்ந்த பிறகு நோர்வேக்கும் சுவீடனுக்கும் இடையில் பல ஆண்டுகள் மோதல்களும் அடிபாடுகளும் இருந்துள்ளன. சுவீடிஷ் உயர் குடியினரின் ஆட்சியைத் துாக்கி எறிவதற்கு நோர்வே மக்கள் தீவிரமாக முயன்றார்கள். இறுதியில் 1905 ஆகஸ்டில் வெற்றியடைந்தார்கள். நோர்வேயின் பாராளுமன்றம், சுவீடிஷ் மன்னர் இனியும் நோர்வேயின் மன்னரல்ல என தீர்மானம் நிறைவேற்றியது. நவீன பொருளாதார அரசியல் உறவுகளின் கீழ் எந்த அடிப்படையில் தேசிய இனங்கள் பிரிந்துபோதல் சாத்தியமாகிறது? உண்மையில் ஏற்படுகின்றது என்பதையும், அரசியல் சுதந்திரம், ஜனநாயகம் என்கின்ற நிலைமைகளில் சிலசமயம் பிரிவினை எந்த வடிவத்தைக் கொள்கிறது என்பதையும், இந்த உதாரணம் நமக்கு காண்பிக்கிறது என்கிறார்.

நோர்வேயானது சுவீடனிலிருந்து பிரிவினைக்கான கோஷம் எழுப்பியபோது சுவீடிஷ் உயர் குடியினரதும் மன்னராட்சியிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான முற்போக்குத் தன்மையை அது கொண்டிருந்தது. உலகம் பூராவும் உருவாகி இருந்த குடியாட்சித் தாக்கத்தின் கீழ் நோர்வே சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டது. இது சுவீடனின் ஆட்சியிலிருந்து முற்போக்குத் தன்மையைக் பெற்றிருந்தது. ஆனால் இன்றைக்கு மூன்றாம் உலக நாடுகளில் ஆதிக்கத்தில் இருக்கின்ற சக்தியாக தரகு முதலாளித்துவமே உள்ளது. தரகு முதலாளித்துவத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான தேசியசக்திகள் மற்றும் ஒடுக்கப்பட்ட சக்திகளின் போராட்டமே தேசவிடுதலைப் போராட்டம். இது பல்தேசிய இனங்கள் வாழுகின்ற நாடுகளில் ஒடுக்கப்பட தேசிய இனம் பிரிந்து போவதற்கான போராட்டமாகவோ, அல்லது ஏகாதிபத்தியத்தின் மூலதனப் பிடியிலிருந்து தேசங்கள் விடுதலை அடைவதற்கான போராட்டமாகவோ அமையலாம். ஆனால் இந்தப் போராட்டத்திற்கான தலைமை சக்திகள் யார் என்பதே எமக்கு முன்னாலுள்ள பிரதான கேள்வியாக அமைகிறது. 'துாண்டில்' கலம் 14 இல் தேசத்தின் குறிப்புகளில் பிரஜைகளின் வாதத்திலிருந்தே இதற்கான பதிலை நாம் பெற்றுக் கொள்ளலாம். பிரஜைகள் சொல்வதைப் போல் ஒரு குறிப்பிட்ட சிந்தனைப் போக்கு உருவாகுவதற்கு அக் குறிப்பிட்ட வர்க்கம் அங்கே யதார்த்தத்தில் இருப்பது நியதியில்லை. மர்க்ஸிசம் தான் முதன் முதலில் அரசியலை ஒரு விஞ்ஞானமெனப் போதித்தது. அரசியலை விஞ்ஞானம் எனப் புரிந்து கொண்ட பட்டாளி வர்க்கச் சிந்தனையாளர்கள் இருப்பதற்கு பட்டாளிவர்க்கம் அங்கு யதார்த்தத்தில் இருக்க வேணும் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்ல முடியாது. எங்கடை நாட்டிலை குறிப்பாக வடக்கு கிழக்கிலை தேசியமுதலாளிகள் இருக்கிறார்களோ இல்லையோ பட்டாளிவர்க்கம் என்று மார்க்ஸிய நூல்களில் தெரிவிக்கப்படும் வர்க்கம் இல்லையென்றே அடித்துச் சொல்லிவிடலாம். அதற்காக பட்டாளிவர்க்க சிந்தனை அடிப்படையிலான அரசியல் இல்லையெனவோ, தேவையில்லையெனவோ ஆகிவிடுமா? அப்படித்தான் தேசியமுதலாளிகன் பற்றிய 'சமரின்' பிரச்சனையும். இங்கு தேசிய முதல்ாளிகளா? தரகு முதலாளிகளா? இருக்கிறார்கள் என்பது ஒரு விடயம். இன்னொன்று புலிகளிடம் ஆதிக்கத்தில் இருக்கும் சிந்தனை முதலாளத்துவ தேசியவாதத்தில் எவ்வகைப்பட்டது என்பதை ஆராய்வது என்ற வாதம் மிகச் சரியானதே. பிரஜைகள் சொல்வதைப் போலவே தேசிய முதலாளித்துவ சிந்தனை அல்லது தேசியவாதம் என்பது வளர்வதற்கு நிச்சயமாக தேசிய முதலாளித்துவம் என்ற பலமான வர்க்கம் அவசியமில்லை.

ஆனால் அவர்களுடைய கருத்துப்படியே பாட்டாளிவர்க்கம் இல்லாத சூழலில் பாட்டாளிவர்க்க சிந்தனையை முன்னெடுத்துச் செல்வதற்கான தலைமை சக்திகள் யார்? இல்லாத ஒரு வர்க்கத்தைப் புதிதாக உருவாக்கி அதன் பிறகு புரட்சியை நடத்துவதா? இல்லை. இந்த சிந்தனையைக் கொண்டிருக்கிற இதனை நோக்கி வழி நடத்தப்படக் கூடிய அல்லது அதன் வழி வரக்கூடிய சமூகத்தின் மிகவும் கீழ்தட்டிலுள்ள உறுதிவாய்ந்த ஒரு வர்க்கமே இந்த சிந்தனைப் போக்கின் தலைமை சக்தியாக முடியும். இது ஆழமான விவாதத்திற்குரிய விடயமெனினும் இதுவே உண்மை நிலை. இந்த அடிப்படையில்தான் இருக்கின்ற தேசியவாத அலைக்குத் தலைமை தாங்கும் வர்க்கம் எது? இல்லாத ஒரு வர்க்கமல்ல, அதாவது பிரஜைகள் சொல்வதைப் போல் 'மார்க்ஸிச நூல்களில் கூறப்படுகின்ற' பாட்டாளிவர்க்கமோ அல்லது தேசிய முதலாளித்துவ வர்க்கமோஅல்ல. ஒரு போராட்டத்தை உறுதிமிக்க ஒரு வர்க்கமே பிரதிநிதிப்படுத்த முடியும். இந்த அடிப்படையில் சீனப் புரட்சியின் போது தேசியமுதலாளிகளும், பாட்டாளிவர்க்க சிந்தனை கொண்ட ஒடுக்கப்பட்ட மக்களும் தேசியவாதத்தினை தலைமை தாங்கி முன்னெடுத்துச் சென்றனர். எமது தேசத்தில் தரகு முதலாளித்துவ சக்திகள் அல்லது ஒடுக்கப்பட்ட வறிய கூலி விவசாயிகள்தான தேசவிடுதலைக் கோஷத்திற்குரிய தலைமை சக்திகளாக அமைய முடியும். தேசியமுதலாளிகள் அல்ல. LTTEஇனர் இதில் எந்த வர்க்கத்தின் பிரதிநிதிகள்? நிச்சயமாக வறிய கூலி விவசாயிகளின், வறிய கூலித்தொழிலாளர்களின் பிரதிநிதிகளல்ல. மேலும் நிலப்பிரபுத்துவத்தோடு இணைந்த மத்தியதர வர்க்கச் சிந்தனைப் போக்கினைக் கொண்டவர்களாக இவர்கள் இருக்கலாம் என்பது இன்னொருவாதம். ஊசலாட்ட உணர்வுள்ள இந்த மத்தியதர வர்க்கம் ஆதிக்கத்தில் பலமாகவுள்ள ஒரு வர்க்கத்தின் பக்கத்திலேயே சார்ந்து நிற்க முடியும். இந்த வகையிலும் LTTE இனர் தரகு முதலாளித்துவத்தின் பக்கத்திலேயே சார்ந்து விடமுடியும். இலங்கையில் தேசிய முதலாளிகளின் இருப்பு சாத்தியமில்லை என்ற அடிப்படையில் LTTE தரகு முதலாளித்துவ சக்தி என்று சமர் கூறியது மேற்குறித்த வாதத்திலிருந்தே!

சுவீடனிலிருந்து நோர்வே

www.tamilarangam.net

பிரிந்துசென்றபோது, நோர்வேயில் தேசியமுதலாளிகளின் ஜனநாயகத்திற்கான போராட்டமாகவே அது அமைந்தது. இலங்கையின் குறிப்பான சூழல் அப்படியானதல்ல. வலுவான தரகு முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்திகள் ஒரு பக்கத்திலும், இன்னொரு பக்கத்தில் கூலித் தொழிலாளர்கள், வறியகூலி விவசாயிகள் என்று பிரிந்து போய்கிடக்கிறது. இடையில் தரகு முதலாளித்துவத்தை எட்டிப்பிடிக்க முயலுகின்ற மத்தியதர வர்க்கத்தின் மேலணிகளும், நாளாந்தம் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் அதன் கீழணிகளுமாக அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு வர்க்கமும் தனது தேவைக்காக தேசியக் கோஷத்தைப் பயன்படுத்திக் கொள்ளும். இதனை 'அரசியல் ஏமாற்றுக்காகவும், நிதிக்கொள்ளைக்காகவும், பலதடவைகள் முதலாளித்துவ வர்க்கத்தினர் குடியரசு முழக்கங்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்..' என்கிறார் ஒரு சிந்தனையாளர். ஒரு குறித்த நாட்டில் நிதிக் கொள்ளையை வலுவாக நடத்துகின்ற வர்க்கம் அல்லது ஆதிக்கத்தில் மிகவும் கீழ் நிலையிலுள்ள வர்க்கம தனது தேவைக்காக தேசியக் கோஷத்தைப் பயன்படுத்திக் கொள்ளும். இந்த வகையில் தமிழீழ தேச விடுதலைப் போராட்டத்தை ஆதிக்கம் செலுத்தும் தரகு முதலாளித்துவ வர்க்கம் பயன்படுத்திக் கொள்கிறது. சீனாவில் இந்த நிதிக் கொள்ளை நடத்துவதில் தேசிய- தரகு முதலாளிகளுக்கிடையில் நிலவிய போட்டியின் விளைவுதான், தேசிய முதலாளிகளின் தரகு முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டமாகும். ஆனால் இந்த சூழலில் தரகு முதலாளிகளின் பக்கத்தில் இருந்த ஏகாதிபத்திய சார்பு நிலைக்கு, எதிரான ஒரு போக்கு தேசிய முதலாளிகளிடம் இருந்ததை முற்றிலும் மறுக்கமுடியாது.

இதைவிட தூண்டிலில் சொன்னதுபோல LTTEஐயும் தரகு முதலாளித்துவத்தின் சில இயல்புகளையும் பொருத்திப் பார்ப்பதன் மூலம் LTTEஐ தரகு முதலாளித்துவ சார்பானவர்கள் என்று சொல்லிவிட முடியாது என்கின்ற வாதத்தில் ஒரு மயக்கமான நிலை இருக்கின்ற போதிலும், இவர்களால் கூட, LTTE யார்? அந்தக் குழுவிற்குப் பின்னாலுள்ள சமூக சக்திகள் யார்? என்ற விவாதத்திற்கான ஒரு குறித்த புதிய அடிப்படையையாவது தரமுடியாமல் இருக்கிறது என்பது துர்ப்பாக்கியமானதே. LTTE தேசியசக்திகள் என்று அடித்துக் கூற என்ன நியாயமான காரணங்கள் இருக்கின்றன என பிரஜைகள் சொன்னால் அதனைத் தொட்டு கருத்துத் தர்க்கங்களினூடாக ஒரு முடிவுக்கு வர வாய்ப்புண்டு.

LTTE சிறிலங்கா இராணுவத்தைக்கொன்று போடுகிறது. இந்திய இராணுவத்துடன் உக்கிரமாக மோதியது என்ற இயல்புகளைக் மட்டும் வைத்துக்கொண்டு, LTTE இடம் தேசியத்தன்மை இருப்பதாக கொச்சையாகக் கூற முடியாது. மக்கள் யுத்தம் - சமரன் குழுவினர் LTTE இனரின் போராட்டத்தை ஆதரித்து எழுதிய பிரசுரத்திலும், LTTE - சிறிலங்கா அரசின் மோதலின் தொடர் இருப்பினால் LTTE இன் இந்தத் தாக்குதல்களை வீரம் செறிந்த விடுதலைப் போராட்டமாக கற்பனை செய்து கொண்டு

www.tamilarangam.net

LTTEஐ தேசிய சக்திகளாகச் சித்தரிக்க முயன்றுள்ளனர். LTTE – சிறிலங்கா அரசுச் சண்டையில் ஆயிரக்கணக்கான பாலகர்களை LTTE பலி கொடுத்திருக்கிறது. பல சிங்கள இராணுவத்தினர் செத்துப்போனார்கள். இதில் முதலாவது தியாகம் என்றும் இரண்டாவதை வெற்றி அல்லது வீரம் என்றும் வர்ணிக்கிறார்கள் இவர்கள். இந்த இரண்டும்தான் LTTEஐ இவர்களுக்குத் தேசிய சக்தியாகக் காட்டியிருக்கிறது. LTTEஇன் இந்தப் போராட்டத்தின் அரசியல் அடிப்படை என்ன? இந்த சாவுகளின் அரசியல் விளைவு என்ன என்பதைப் பார்க்க மறுக்கிறார்கள். ரஷ்யாவில் நரோட்னிக்குகளின் சாவு தியாகமாக இருக்கவில்லை. அவர்களின் இலக்குத்தான் எமது பிரச்சனை. 'இப் போராளிகள் அமைப்புக்களில் எவையேனும் தேசியஇன விடுதலைப் புரட்சிக்கான திட்டம் எதையும் கொண்டிருக்கவில்லை' என்கிறது சமரன். திட்டமிடப்படாத யுத்தம் எப்படி தேசியயுத்தம் ஆகலாம்? எங்கே தேசியப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பப் போகிறது? எந்த சக்திகளுடன் அய்க்கியம், யார் எதிரிகள் என்ற குறிக்கோள் இல்லாமல் போராட்டம் தொடர்கிறது. இங்கே இவர்கள் பாட்டாளிவர்க்க சக்திகள் இல்லை என்பது சமரனுக்கும் தெளிவு. அப்படியானால் இவர்கள் யார்? எந்த சக்திகளுடனும் அணிசேரத் தயாரான நிலையிலுள்ள திட்டமற்ற இந்தக் குழு யாருக்குப் பலமாக அமையும்? அல்லது யாரால் பயன்படுத்திக் கொள்ளப்பட முடியும்? என்ற கேள்விகளுக்கு சமரனிடம் பதிலில்லை. நிச்சயமாக இன்றைக்குச் சமூகத்தில் பலம் பொருந்திய ஆதிக்கத்திலுள்ள சக்திகளின் பலமாகவே அது அமைய முடியும். அந்த வகையில் இலங்கை போன்ற நாடுகளில் ஆதிக்கத்திலுள்ள சக்திகளான தரகு முதலாளித்துவத்தின் பக்கமே LTTE சார்ந்து நிற்க முடியும்.

இங்கே இவர்கள் தேசிய இயல்பு என்று குறிப்பிடுவது LTTEஇனரின் விடாப்பிடியான தாக்குதல்களைத்தான். உண்மையில் இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக இவர்களே இவர்களுடன் முரண்பட்டுக் கொள்கிறார்கள் என்பது வேறு விடயம். இந்தத் தாக்குதல்களை தேச விடுதலைப் போராட்டம் என்கிறார்கள். ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் 1983 இல் ஒரு தேசிய விடுதலை யுத்தம்என்ற வடிவத்தை எடுத்ததிலிருந்து, அது பல்வேறு இடைக்கட்டங்களைக் கடந்து அது இலங்கை அரசிற்கும் வி.பு களுக்கும் இடையிலான உள் நாட்டு யுத்தம் என்ற வடிவத்தை எடுத்திருக்கிறது. (அடுத்தகாலடி பக் 5) 'எந்தவொரு தேசவிடுதலை யுத்தமும் ஒரு மக்கள் யுத்தம்' (அதே நூல்பக்கம் 17) பரந்துபட்ட மக்கள், ஜனநாயக மறுப்பின்மை காரணமாக, அமைப்பு ரீதியாகத் திரண்டு தங்களின் விடுதலைக்காகப் போராட முடியாமல், அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்டு, அவ் அமைப்புக்களின் பலத்தைச் சார்ந்து போரிடுவதற்கு வாய்ப்பு மறுக்கப்படுவதால் தங்களின் விடுதலைக்காகப் போராட முடியாமல் வெறும் பார்வையாளர்கள் என்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். (அதே நூல் பக்கம்17) எந்த ஒரு தேச விடுதலை யுத்தமும் மக்கள்யுத்தம். LTTE இன் யுத்தம் தேச விடுதலை யுத்தம் ஆனால் LTTEஇன் யுத்தம் மக்கள்

www.tamilarangam.net

பார்வையாளராக வைக்கப்பட்டுள்ள யுத்தம். இவ்வாறு முரணான குழப்பங்களை சமரன் தனக்குத்தானே கொண்டிருப்பது ஒரு புறம் இருக்கட்டும்.

இந்தக் கட்டுரையில், LTTEஐ தேசிய சக்தியாக முன் நிறுத்துவதற்கான அடிப்படைக் காரணமாக இந்திய இராணுவத்திற்கும், இலங்கை இராணுவத்திற்கும் எதிராக LTTE நடாத்திய தாக்குதல்களும், அதன் விடாப்பிடியான யுத்தத்தையுமே முன் வைக்கிறது. இந்த யுத்தங்களின் தோற்றம், LTTE பற்றியதும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பானதுமான வரலாற்று ரீதியான நோக்கு நிலை எதுவுமின்றி சண்டையை மட்டும் தனிமைப்படுத்திப் பார்த்து LTTEஐ நியாயப்படுத்தியிருக்கிறது சமரன். இந்திய அரசும் இலங்கை அரசும் உடன்படிக்கை (ராஜீவ்- ஜெயவர்த்தனா ஒப்பந்தம்) செய்து கொண்டிருந்த காலப்பகுதியில், LTTE இனால், EROS தவிர்ந்த ஏனைய குட்டி முதலாளித்துவக் குழுக்கள் ஈழப்பகுதிக்குள் நுழைய முடியாதவாறு தடை செய்யப்பட்டிருந்தன. இந்தக் குட்டி முதலாளித்துவக் குழுக்களை, LTTE தனது பாசிச நடவடிக்கைகளுக்கூடாக இந்தியா பக்கம் முற்றாக இறுக்கி விட்டிருந்தது. ஏற்கனவே ஊசலாடிக் கொண்டிருந்த இந்தக் குழுக்கள், தமது குழு நலனை நிலை நாட்டிக்கொள்ள தமிழ் மக்களின் மொத்த நலனையும் இந்தியாவிடம் அடகு வைத்துவிட்டு LTTE இற்கு எதிராகப் போராடுதல் என்பதையே இறுதி இலட்சியமாகக் கொண்டன. (பிற்காலத்தில் மொத்த மக்கள் மீதும் தமது காட்டுமிராண்டித்தனத்தை இந்திய இராணுவத்தோடு இணைந்து இக் குழுக்கள் அரங்கேற்றின) இதனால் இந்தக் குழுக்களைப் பயன் படுத்திக் கொள்வதில் இந்தியாவிற்கு சிரமம் இருக்கவில்லை. இனி LTTE இன் குழு நலனைத் திருப்திப்படுத்த வேண்டியதே இந்தியாவின் முக்கிய பிரச்சனையாக அமைந்தது.

1987யூலை சமாதான ஒப்பந்தம் செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதும் தமிழ் பேசும் மக்கள் ஒருவித மகிழ்ச்சியை அடைந்தனர். அரசின் அடக்கு முறைக்கு மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்த மட்டுநகர், திருமலை மக்கள் குறிப்பாக ஒருவித நிம்மதியைப் பெற்றுக் கொண்டதாக உணர்ந்தனர். (Broken palmyra)

வடமராட்சி 'operation liberataion' முடிந்த பின்னர், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இந்தியத் தூதுவராலயத்தைச் சேர்ந்த திரு.பூரி என்பவருடன் LTTE பேச்சுவார்த்தை நடாத்திய பின்னர், LTTEஐ இந்தியா, தமிழ் மக்களின் தனியான தலைமையாக அங்கீகரித்து விட்டதாக யாழ், தமிழ் பத்திரிகைகள் மூலமாகவும், இந்தியாவிலும், இலங்கையிலும் அறிக்கை விடுத்தனர். ராஜீவ்காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகக் கூறிக்கொண்டு, திரு பிரபாகரன் (24யூலை87) இந்திய விமானப்படை ஹெலிக்கொப்டரில் (Helicopter) யாழ்ப்பாணம் சுதுமலையிலிருந்து டெல்லிக்குப் பயணமானார்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு நடவடிக்கை தொடர்பாக கொழும்பு ஆராய்ந்து கொண்டிருந்தது. ஆனால் டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்ட பிரபாகரன் திரும்பி வரவில்லை. 30 யூலை

www.tamilarangam.net

இந்திய இராணுவம் பலாலிக்குள் நுழையத் தொடங்கியது. அப்போது LTTE இன் பிரச்சனை பிரபாகரனைப் பாதுகாப்பாக யாழ்ப்பாணம் கூப்பிடுவது தொடர்பாகவே இருந்தது. சந்திக்குச் சந்தி பிரபாகரனின் படங்கள் வைக்கப்பட்டு தோரணங்கள் கட்டப்பட்டு 'தலைவர் எங்கே' என்ற கோஷத்தின் கீழ் போராட்டங்கள் நடந்தன. ஆகஸ்ட் 2,பிரபாகரன் பலாலியிலிருந்து இந்திய இராணுவத்தின் பலத்த பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டு சுதுமலையில் மீண்டும் விடப்பட்டார். பிரபாகரன் ராஜீவுடன் நடத்திய பேச்சுவார்த்தை என்ன? அது எந்த அடிப்படையில் அமைந்தது என்பது ஆரம்பத்திலிருந்தேகேள்விக் குறியாக அமைந்தது. மோதத் தொடங்கியதும், விடுதலைப் புலிகளாலும், இந்திய அரசாலும் இவை வெளிச்சத்திற்கு வந்தன. இந்த விடயத்தில் ராஜீவ்- LTTE இற்கு அளித்த உறுதி மொழிகளை பிரபாகரன் பூரணமாக ஒப்புக் கொண்டிருந்தார்.

1. தீர்வுத் திட்டத்திலுள்ள குறைபாடுகள் தீர்த்து வைக்கப்படும்.

2. விடுதலைப்புலிகளின் தலைமையில் வடக்கு கிழக்கு இணைந்த ஒரு இடைக்கால அரசு நிறுவப்படும்.

3. தமிழ் மாநில பொலிஸ்நிர்வாகம் புலிகள் வசம் ஒப்படைக்கப்படும்.

4. இந்திய சமாதானப்படை தமிழ் மக்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்கும்.

இந்த உறுதிமொழிகள் தொடர்பாக LTTE இன் 'இந்திய இலங்கை ஒப்பந்தம்- விடுதலைப்புலிகள் நிலைப்பாடு' என்ற வெளியீட்டில் பின்வருமாறு கூறப்பட்டது.

'பாரதப் பிரதமரின் உறுதிமொழிகளை அடுத்து நாம் ஆயுதங்களைக் கையளிக்க இணங்கினோம். தமிழ்மக்களின் நலன்கள் பேணப்படும் பட்சத்தில், இந்திய இலங்கை ஒப்பந்த அமுலுக்கு ஒத்துழைப்பதாகக் கூறினோம்'

'நாம் வாக்களித்தபடி கணிசமான தொகையில் எமது ஆயுதங்களை இந்திய அமைதிப்படை வசம் ஒப்படைத்தோம். இந்தியாவுடன் நல்லுறவைப் பேணும் நல்லெண்ண முயற்சியாக, இந்திய இலங்கை ஒப்பந்த அமுலுக்கு எமது ஒத்துழைப்பின் அறிகுறியாக நாம் ஆயுதங்களைக் கையளித்தோம். இடைக்கால அரசு நிறுவப்பட்டதும் எஞ்சிய ஆயுதங்களையும் கையளிப்பதாக வாக்குறுதியளித்தோம்'

4 ஆகஸ்ட் 1987 சுதுமலையில் LTTE இனால் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் வே.பிரபாகரன் பேசுகையில்

'உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் விமோசனத்திற்காக, உங்கள் விடுதலைக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து, எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்பு என்ற பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம்'

இது தொடர்பாக மேற்குறித்த அதே நூலில்-

'பிரபாகரன் தனது வாக்குறுதியை நிறைவேற்றினார். பாரதம் மீதான தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார். தமது மக்களின் நலன் பேணப்படும், தம்து மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் ஒப்பந்த அமுலுக்கு இசைவாக ஆயுதங்களை ஒப்படைத்தார்.' இதன் பிறகு LTTE இனது ஊதுகுழல்களாத் தொழிற்பட்ட EROS உம் ஆயுதங்களை ஒப்படைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

LTTEஇனரும் ஆயுத ஒப்படைப்பைக் கட்டம் கட்டமாக நிகழ்த்தினர்.

இந்திய அமைதிகாக்கும்படை இலங்கையில் தலையிட்டதும் அனைத்து ஈழப்போராளி அமைப்புக்களுக்கும், ஆயுதங்களை ஒப்புடைக்குமாறு அது ஆணை பிறப்பித்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்து விட்டது. (அடுத்த காலடி பக்.8)

பிரபாகரனுக்கும் ராஜீவிற்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் தமிழ் மக்களின் இறைமையையும் தேசியநலன்களும் உத்திரவாதப்படுகிறதா? ஒரு ஈழக் குழந்தைக்குக் கூட இது தெட்டத் தெளிவாக விளங்கும். இங்கே முதன்மைப் படுத்தப்படுவதெல்லாம் தமிழ் பேசும் மக்களின் தேசிய நலன்களல்ல. விடுதலைப் புலிகளின் அதிகார வெறித்தனமும், அதனது தனிப்பட்ட குழு நலன்களும்தான்.

இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் பிரச்சனை பற்றிய அடிப்படையையே அடியோடு மறுக்கிறது. அடிப்படையிலேயே தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளோடு முரண்படுகிறது. இதனையே விடுதலைப் புலிகள்

'இலங்கை மக்கள் ஒரு பல்லின சமுதாயமாக (Plural society) வாழ்கிறார்கள். இதில் தமிழர்கள் ஓர் இனக்குழு (ethnic group) என்ற ரீதியில் இந்திய இலங்கை ஒப்பந்தம், ஈழத்தமிழினத்திற்கு வரைவிலக்கணம் அளிக்கிறது.

இந்திய அரசின் இந்த விளக்கம் எமது போராட்டத்திற்கு மூலமாகவுள்ள தேசியஇனக் கோட்பாட்டையும், தேசிய சுயநிர்ணய உரிமைப் பிரச்சனையையும், குழிதோண்டிப் புதைத்து விடுகிறது. (இ.இ.ஒப்பந்தம். வி.பு.நிலைப்பாடு, பக்5)

தமிழ் பேசும் மக்களின் உரிமையை இவ்வாறு அடிப்படையிலேயே நிராகரிக்கின்ற இந்த ஒப்பந்தத்தைப் புரிந்து வைத்திருந்த LTTE எந்த அடிப்படையில் ஏற்றுக்கொண்டது, எந்த அடிப்படையில் ஆயுதங்களை கையளிக்க முன் வந்தது. ராஜீவுடன் நடந்த பேரத்திலும் முதன்மைப் படுத்தப்பட்டது, LTTEஇன் குழு நலனே தவிர, தமிழ் பேசும் மக்களின் தேசிய நலன்களல்ல. இந்தக் குழு நலன்களின் அடிப்படையிலேயே ஆயுதம் ஒப்படைக்கப்பட்டது. இதன் பிறகு தமது சொந்த நலனுக்காக இந்தியாவின் பாதங்களில் பிரபாகரன் வீழ்ந்து கிடந்தார். மிகுதிப் பகுதி ஆயுதம் இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்ட பின்னர் ஒப்படைக்கப்படும் என்றது LTTE.

ஒரு பகுதி ஆயுதம் ஒப்படைக்கப்பட்டு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்படுகின்ற அந்த இடைக்காலத்தில் நடந்தது பச்சையான அதிகாரப்பேரம் மட்டும்தான். அந்த அதிகாரப் பேரத்தில் தோல்வி கண்ட LTTE இன் மன வெளிப்பாடுதான் IPKF மீதான தாக்குதல்களும், ஆயிரக்கணக்கான மக்களதும், போராளிகளினதும் உயிரிழப்புகளுமாகும்.

இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும், இந்த இடைக்கால நிர்வாக சபை, மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் வரை நீடிக்கும் என்றும், இதில் எட்டு உறுப்பினர்கள் பங்கு பெறுவார்கள் என்றும், LTTE மூன்று பேர் என்றும்,

www.tamilarangam.net

TULF இரண்டு பேர், அரச ஊழியர் இரண்டு பேர், ஏனைய குழுக்கள் ஒரு ஆள் என்ற அடிப்படையில் இவ் உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள் என்றும் இந்திய தரப்பில் முன் மொழியப்பட்டது.

இந்த வேளையில் இந்திய இராணுவத்துடன் LTTE அதிகமான உறவுகளை வளர்த்துக் கொண்டதோடு, LTTE இன் மேல் மட்ட உறுப்பினர்களுக்குக் கூட, இத் தீர்விலும் இந்தியாவிலும் கணிசமான நம்பிக்கைகள் வளர்ந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில்தான், LTTE இன் யாழ்ப்பாணத் தளபதி குமரப்பாவினதும், திருமலைத் தளபதி புலேந்திரனதும் திருமண வைபவங்கள் நடந்தன. இத் திருமணத்திற்கு இந்திய இராணுவ உயரதிகாரிகளும் சமூகமளித்து இவர்களோடு ஒரே மேசையில் விருந்துண்டு மகிழ்ந்தனர்.

ஆனால் இந்தியா LTTEஐ முழுமையாக நம்பத் தயாராக இருக்கவில்லை. LTTEஉம் மொத்த தமிழ் மக்களின் நலனை விட குழுநலனையே தூக்கிப் பிடித்தது. அதற்காக எந்த மேலாதிக்க சக்திக்கும் தமது நலனை அடகு வைக்கத் தயாராக இருந்தது. ஆனால் இந்தியா இதற்கு இணங்கி வருமா என்ற சந்தேகம் ஒரு புறத்தில் LTTE இற்கு இருந்த அதே நேரம், ஆயுதமற்ற பேச்சுவார்த்தை அரசியல் குழுவாக LTTE தொடர்ந்து நிலைகொள்ள முடியாது என்பதும் LTTE இற்கு தெளிவாகத் தெரியும். இதனால் இந்த அடிப்படையிலேயே தனது தொடர் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளல் என்ற வகையிலேயே LTTE இன், இந்தியாவுடனான பேச்சுக்கள் அமைந்தன. மாதம் அய்ம்பது கோடி ரூபாய்வரை இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்ள LTTE இணங்கியது. இதனைப் பின்னர் தனது இராணுவச் செலவிற்காகப் பெற்றுக் கொண்டதாக LTTE அறிவித்தது.

இதேவேளை இந்தியாவிற்கும் LTTE தொடர்பான பல சந்தேகங்கள் இருந்தது. கடந்த காலங்களில் இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளுடன் LTTEஇற்கு இருந்த உறவுகளும், கிட்டு போன்ற LTTE இன் தளபதிகளூடாக இலங்கை அரசுடன் LTTE இற்கு இருந்த உறவுகளும், பாகிஸ்தான் சார்பான இந்தியாவின் தீவிரவாதக் குழுக்களுடன் LTTE வைத்துக் கொண்டிருந்த உறவுகளும், இந்தியாவிற்கு LTTE மீது முழு நம்பிக்கையடைய தடையாக அமைந்தன.

இந்நிலையில் இந்தியாவின் ஆசியுடன் உருவாகி 3star என்று பிரபலமாகியிருந்த ENDLF என்ற துரோகக் கும்பல் மக்கள் முன் தோன்றிற்று. யாழ் கடற்கரை வீதியில் முதன் முதலாக இந்த துரோகக் குழுவின் முகாம் ஒன்று அமைக்கப்பட்டது. இம் முகாம் அமைக்கப்பட்டதும், LTTE ஆலும், அவர்களின் கையாட்களினாலும், முகாம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து ENDLF துப்பாக்கிகளுடன் மக்கள் முன் தோன்றினர். இவ்வாறு பல இடங்களில் இந்தியாவின் அய்ந்தாம் படையாகச் செயற்பட்ட குழுக்களின் முகாம்கள் நிறுவப்பட்டன.

இதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழகத்தில் இக் குழுக்களுக்கு எதிரான வெகுஜனங்களினதும்,

www.tamilarangam.net

மாணவர்களினதும் நடவடிக்கை தொடர்பாக ஒரு மாணவர் பொதுக்கூட்டம் LTTE இற்கு ஆதரவான மாணவர்களினால் கூட்டப்பட்டது. இப் பொதுக் கூட்டத்தில் இக் குழுக்களை எதிர்த்துச் செயற்பட குறிப்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் முன் வரவேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டது. ஆனால் பொதுக் கூட்டத்தின் இறுதியில் LTTE இனர் அவ்வமைப்புக்கள் மீதான தடையை நீக்கி சுதந்திரமாக இயங்கக் கூடிய ஒரு ஜனநாயகத் தன்மையை வழங்கவேண்டும் என்றும், இதனூடாகவே அவ் அமைப்புக்களின் இந்திய சார்பான நிலையைக் குறைக்கலாம் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தக் கருத்தை LTTE இனரிடம் மாணவர் பிரதிநிதிகள் கூறிய போது LTTE இனர் அது தொடர்பாக ஆலோசிப்பதாகக் கூறினர். சில நாட்களின் பின்னர் ஏனைய அமைப்புக்களிலுள்ள போராளிகளை LTTE தனது அமைப்பினுள் உள்வாங்கத் தயாராக இருப்பதாக அறிக்கை விடுத்தது.

ஆனால் ஏனைய துரோகக் குழுக்கள் ஆயுதங்களுடன் பரவலாக உலாவத் தொடங்கினர். 1, செப்ரெம்பர் 87 இல் குளப்பிட்டிச்சந்தியில் காவலுக்கு நின்ற LTTE உறுப்பினர், வான் ஒன்றில் வந்தவர்களால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டார். மானிப்பாய், K.K.S, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் LTTE இனர் துரோகக் குழுக்களால் தாம் தாக்கப்படுவதாக ஒலி பெருக்கிகளில் அறிவித்தனர்.

15, செப்ரெம்பர் 87 அன்று அய்ந்து கோரிக்கைகள் முன்வைத்து LTTE இன் அரசியல் பொறுப்பாளராக இருந்த திலீபனின் பிரபல சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம்பமானது. திலீபனை உண்ணாவிரதம் இருக்க வைத்துவிட்டு மறுபுறத்தில் LTTE ஆனது இந்திய தூதுவராக இருந்த டிக்ஸிற் உடன் அதிகாரப் பேரம் நடத்திக் கொண்டிருந்தது. 26 செப்ரெம்பர் 1987, ஞாயிற்றுக்கிழமை திலீபன் தனது உண்ணாவிரதத்தின் பன்னிரெண்டாவது நாளில் இறந்து போனார்.

திலீபனின் உண்ணாவிரதம் ஆரம்பித்த போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பின்வருமாறு;

1. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.

2. புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்கள குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

3. இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு வேலைகள் நிறுத்தப்பட வேண்டும்.

4. வட கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

5. இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், ஊர்காவல் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு, தமிழ்க் கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடிகொண்டுள்ள இராணுவ, பொலிஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து

www.tamilarangam.net

LTTE இன் அரசியல் பிரிவுத் தலைவன் உண்ணாவிரதம் இருந்த அதே நேரம் இந்தியாவிற்கும், LTTE இற்கும் இடையில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகவே பேச்சுக்கள் நடந்தன. இந்தக் கோரிக்கைகளும், உண்ணாவிரதமும் திலீபனின் இறப்பும் அதிகாரத்தை விடுதலைப் புலிகள் வசம் கைப்பற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட துருப்புச் சீட்டுக்களே ஒழிய வேறில்லை. இங்கெல்லாம் விடுதலைப் புலிகளின் தனிப்பட்ட குழுநலன்களே அதி முக்கியத்துவம் பெற்றிருந்தன. எந்த வகையிலும் தமிழ் பேசும் மக்களினது நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

28 செப்ரெம்பர் 87 இல் LTTE இந்திய அரசின் அதிகார பேரம் ஒரு முடிவுக்கு வந்தது. திலீபனின் உண்ணாவிரதக் கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இடைக்கால நிர்வாக சபையின் உறுப்பினர்கள் எட்டிலிருந்து பன்னிரெண்டாக உயர்த்துவது என்றும், அதில் LTTE உறுப்பினர் தொகையை மூன்றிலிருந்து ஏழாக உயர்த்துவது என்றும் முடிவு காணப்பட்டது. இதற்கு இணங்கிய LTTE பதினைந்து பேரைத் தெரிவு செய்து இலங்கை ஜனாதிபதியின் முடிவுக்கு அனுப்பியது. இத்தோடு திலீபன் கோரிக்கைகள் நின்று போயின.

இதனால் இன்றைக்கு வரை எதற்காக திலீபன் உண்ணாவிரதம் இருந்தான் என்ற கேள்வி விடை காணப்படாததாகவே கிடக்கிறது.

'Why then did Thileepan die? That was a question for which no satisfactory explanation could be found' (Broken palmyra)

இந்தப் பேரத்தின் ஒரு பகுதியாகவே LTTE இற்கு மாதா மாதம் அய்ம்பது கோடி ரூபாய் தருவதாக இந்தியா ஒப்புக் கொண்டதாக இருதரப்பாலும் பின்னர் ஒப்புக் கொள்ளப்பட்டது.

பின்னர் 02 ஒக்ரோபர் 87, குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 பேர், பருத்தித்துறை கடற்பகுதியால் சென்று கொண்டிருந்த போது 'ஆயுதங்களுடன் சென்றனர்' என்ற குற்றச்சாட்டின் பெயரில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர். இதற்கிடையில் LTTE இனால் இடைக்கால நிர்வாக சபையின் தலைவர் பதவிக்கு, இலங்கை ஜனாதிபதியின் தெரிவுக்காக அனுப்பி வைக்கப்பட்ட மூன்று பெயர்களில் N. பத்மநாதன் என்பவர் தொடர்பாக முரண்பாடுகள் முற்றிற்று. கைது செய்யப்பட்டவர்களை கொழும்பு கொண்டு செல்ல முற்பட்ட போது சயனைட் அருந்தி குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரெண்டு பேர் மரணமாயினர். இதனோடு கூடவே LTTE இனால் K.K.S இலுள்ள இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் G.M, ஜெயமான, A.G.M, கஜநாயக்க ஆகிய சிங்களவர்களை 6 ஒக்ரோபர் காலை சுட்டுக் கொன்று போட்டனர். பின்னர் ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்த இரு சிங்களவர்களும், LTTE இனால் கைது செய்யப்பட்ட இராணுவத்தினர் பன்னிரெண்டுபேரும் கொல்லப்பட்டனர். இத்தோடு இந்தியா- LTTE உறவு கேள்விக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறியாக அமைந்தது. 10 ஒக்ரோபர் மாலை இரண்டு மணி அளவில் LTTE - IPKF ராணுவரீதியான மோதல் ஆரம்பமானது.

'எமது இயக்கத்தால் அன்றே நிராகரிக்கப்பட்ட மாகாணசபைத் திட்டத்தைத்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் இன்று முன்வைக்கிறது.'

(இ.இ. ஒப்பந்தம் வி.பு நிலைப்பாடு பக் 9)

இத்திட்டம் தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சனைகளை, அவர்களது நியாயமான அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யுமென எதிர்பார்ப்பது அசட்டுத்தனமாகும்.

(அதே நூல் பக்கம்9)

இவ் ஒப்பந்தம் இந்தியாவினதும், இலங்கையினதும் ஆளும் வர்க்க நலன்களை மட்டுமே பேணுகிறது.

(இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சனையும். வெளியீடு: அரசியல் பிரிவு வி.பு.பக் 15)

இந்திய இலங்கை ஒப்பந்தம் தமிழீழ மக்களின் நலன்களையோ அன்றி அவர்களின் அரசியல் அபிலாசைகளையோ, பாதுகாப்பினையோ பேணவில்லை. மாறாக தமிழ் மக்கள் தொடர்ந்தும் சிங்கள இனவாத ஆட்சியின் கீழ் ஒடுக்கப்பட்டு வருவதற்கு வழிகோலியது.

(அதே நூல்பக். 18)

இவ்வாறான வெற்றுக்கோசங்கள் மூலம் இந்திய அரசுடன் எதற்காக அதிகார பேரம் நடத்தியது? இங்கே LTTE இற்கு முக்கியமானது யாருடைய நலன் என்பது மிகவும் வெளிப்படையாகவே விளக்கப்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல், IPKF - LTTE சண்டை தொடங்கி நான்கு மாதங்களுக்குப் பிறகு 24 பெப்பிரவரி 88 அன்று LTTE தலைவரால் கையெழுத்திடப்பட்டு அய்.நா மனித உரிமைகள் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் LTTEஇன் நலன் தமிழ் பேசும் மக்களின் தேசியநலனா? என்பதை நிரூபணமாக்கி விட்டது.

உண்மையில் இந்த மோதல் ஆரம்பமாவதற்கு முதல் நடந்த பேரங்கள் LTTE இற்கும், இந்திய அரசிற்குமிடையிலான உறவில் ஏற்பட்டிருந்த நம்பிக்கையை வலுவிழக்கச் செய்ததின் ஒரு விளைவே. LTTE இன் தனிப்பட்ட குழு நலனை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பேரங்கள் அமைந்திருந்ததை LTTE இன் தலைவரால் கூட மறுக்க முடியாதபடி வெளிச்சத்திற்கு வந்துவிட்டன. தமது தனிப்பட்ட குழு நலனிற்காக எந்த சக்திக்கும் தம்மை அடகு வைக்க LTTE தயாராக இருந்தது. LTTE யை நியாயப்படுத்துகின்ற சிலர், LTTE ஆரம்பத்தில் இந்தியாவை நம்ப முனைந்தது என்றும், பிறகு இந்தியாவின் நடவடிக்கைகள் தமிழ் மக்களுக்கு எதிராக மாறும் என்ற சந்தேகம் வலுத்த போது IPKR அய்த் தாக்கத் தொடங்கினர் என்றும் சொன்னார்கள். இவர்கள் LTTE என்ற அமைப்பு வெள்ளையுள்ளம் கொண்ட, ஒன்றுமறியாப் பிரபாகரனின் அமைப்பு என்றும், தாம் பெரிய தத்துவார்த்த கர்த்தாக்கள் என்றும் கற்பனை செய்து கொண்டு அலைகிறார்கள். LTTEஇன் தத்துவார்த்த மூலவேர்களான அன்ரன் பாலசிங்கம், கண்ணாடி சிவக்குமார், சங்கர் போன்றவர்கள் சின்னப் பிள்ளைகளல்ல.

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

TAMIL EELAM

To: Members and Observers
United Nations Commission on Human Rights
Forty-fourth session
From: The Liberation Tigers of Tamil Eelam
24 February 1988

Dear Delegates:

On this date we have transmitted our notice of acceptanc of the Geneva Conventions I-IV of 1949 and the Protocols Additional I and II to the Geneva Conventions to United Nations Headquarters and to the International Committee of the Red Cross.

On this same date, we also announce a new appeal by us to the Honourable Shri Rajiv Gandhi, the Prime Minister of India, for a cessation of hostilities and the initiation of peace negotiations. We repeat our pledge to the Government of India that we will co-operate with it to implement the Indo-Sri Lankan Accord to protect the honor, interests and safety of the Tamil people.

We appeal to the distinguished Members and Observers of the Forty-fourth session of the United Nations Commission on Human Rights to prevail upon the Government of India to declare cease-fire and initiate peace negotiations to resolve the following issues:

1. Handing over of arms;
2. The fulfillment of the basic aspirations of the Tamil people.

We also appeal to you to assist us and the Government of India t alleviate the profound suffering of the Tamil people.

Yours truly,

[illegible]

Velupillai Prabhakaran
Leader, Liberation Tigers of Tamil Eelam



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐ.நா.மனித உரிமைக் குழுவின் 44 அமர்வின் உறுப்பினர்களுக்கும்,
பார்வையாளர்களுக்கும்,
புலிகளிடமிருந்து
24 மாசி 1988

அன்பான பிரதிநிதிகளே,

ஐ.நா தலைமையகத்துக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் நாங்கள் ஜெனிவா உடன்படிக்கையின் 49 ம் ஆண்டின் 1 4 வரையான உடன்படிக்கைகளையும் மேலதிக சேர்க்கைகளான 1,2 என்பவற்றையும் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கிறோம்.

இதே நாளில், யுத்த நிறுத்தம் செய்யவும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் இந்திய பிரதமரான ராஜீவ் காந்திக்கு புதிய வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறோம். தமிழ் மக்களின் கௌரவம், பாதுகாப்பு, நலன்கள் என்பவற்றைப் பாதுகாப்பதற்காக இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த இந்திய அரசுடன் ஒத்துழைப்பதாக உறுதியளிக்கிறோம்.

இம்மாநாட்டின் உறுப்பினர்கள், பின்வரும் விடயங்களில் தீர்வு காண யுத்த நிறுத்தம் செய்யவும் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பிக்க இந்தியாவை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

1.ஆயுத ஒப்படைப்பு

2.தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளை நிறைவேற்றல்

எங்களுக்கும் இந்திய அரசுக்கும் தமிழ் மக்களின் துயரங்களை குறைக்க உதவி செய்யும்படியும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள
வே.பிரபாகரன்

தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்

நன்றி : தாயகம்

www.tamilarangam.net

அவர்களுக்கு இந்தியா யாரென்றும், இந்தியாவின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் முன்னமே தெளிவாகத் தெரியும். இந்தக் கூட்டத்தை தேசியசக்திகள் என்று புகழ்பாடிக் கொண்டிருப்பவர்கள், உண்மைகளை மூடி மறைத்துவிட்டு சில சம்பவங்களை மட்டும் தனிமைப்படுத்திப் பார்க்கின்ற குருட்டு மனோபாவத்தை விடுத்து, ஆரோக்கியமான விடயங்களை ஆராயும் நிலைக்கு வரவேண்டும் என்பதே எமது அவா! ‘அடுத்த காலடி'யின் கட்டுரையில் தொடர்ச்சியான உண்மைகள் முற்றாக மறைக்கப்பட்டு, சண்டையை மட்டும் தனிமைப்படுத்திப் பார்க்கிற தன்மை மேலோங்கி நிற்கிறது.

LTTEஅய்த் தேசிய சக்திகளாகவும், விடுதலை வீரர்களாகவும், பார்க்க முயலுகின்ற ‘சமரன்' போன்றவை LTTE இற்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையிலான போரில் அழிந்து போனவர்கள், அப்பாவிப் பொது மக்களும், LTTE இல் இணைந்து போராடிய 12, 13 வயது சிறுபிள்ளைகளும்தான். மாறாக LTTE இன் தலைமையோ அல்லது அதன் மார்க்கமோ அல்ல. LTTE எப்போதும் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்குப் பாதகமாகவே தனது செயற்பாடுகளை வரித்துக் கொண்டிருக்கிறது. இன்றைக்கும் LTTE என்ற அமைப்பின் குழு நலனும், அதன் தலைவர்களின் சொந்த நலனும் பாதிக்கப்படுமானால் LTTE யாருடனும் சமரசத்திற்குப் போக தயாராகவே உள்ளது. மக்கள் மீதோ, தேசத்தின் மீதோ எந்தவித நேசமுமற்ற இந்த சமூகவிராதப் பாசிசக் கும்பல், தனது குழு நலனைப் பாதுகாப்பதற்காக சிறிலங்கா அரசுடன் பல பேச்சுவார்த்தைகளை இந்தப் போராட்டத்தின் ஆரம்பம் முதலே நடத்தியிருக்கிறது. சிறிலங்கா அரசும் LTTE உம் அதன் அரசியல் மார்க்கத்திற்குப் பாதகமாக பொதுவாக நடந்து கொண்டதில்லை. 1986இல் சிறிலங்கா அரசு நடத்திய ‘தமிழீழத்தின் குரல்' என்ற வானொலி ஒலிபரப்புச் சேவை இதற்கு நல்ல உதாரணம். இந்த ஒலிபரப்புச் சேவை LTTE இற்கும், மக்களுக்கும், பிற அமைப்புக்களுக்கும் யாரால் எங்கு நடாத்தப்படுகிறது என்பது தொடர்பாக மர்மமாகவே இருந்தது. விஜிதரன் என்ற மாணவன் கடத்தப்பட்டது தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நடாத்திய போராட்டத்தின் போது இவ் ஒலிபரப்பு இம் மாணவன் கடத்தப்பட்டது EPRLF இன் செயல் என்றே அம்பலப்படுத்தியது. LTTE இன் சில இராணுவ நடவடிக்கைகளை விமர்சித்தாலும் குறிப்பாக ஏனைய குழுக்களையே விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது. இவ் வானொலி வடமராட்சியின் operation liberation போது சிறிலங்கா அரசாலே நடத்தப்படுகிறது என அம்பலமாக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலே TELO அழிக்கப்பட்ட போது கல்வியங்காடு என்னுமிடத்தில் இலங்கை விமானப் படையும் TELO குழுவினரைத் தாக்கியது. இந்த மோதலின் போது சிறிலங்கா இராணுவம் முகாமிலிருந்து வெளியேற முயலவோ அல்லது தமிழ் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தவோ இல்லை. சிறிலங்கா அரசு அப்படி முயன்றிருக்குமானால், இந்த

www.tamilarangam.net

மோதலில் TELO முற்றாக அழிக்கப்பட்டிராது. இங்கே நாம் TELO, சிறிலங்கா அரசு ஆகியவற்றை நியாயப்படுத்த முயலவில்லை. TELO என்ற துரோகக்குழு சரியான ஒரு சக்தியால் அழிக்கப்பட வேண்டியதே என்பதில் நாம் உடன்படுகிறோம். ஆனால் ஏன் சிறிலங்கா அரசு LTTE இற்கு சாதகமான இந்த முயற்சிகளைமேற்கொண்டது என்பது இன்றைக்கும் கேள்விக்குரியதாகவே பலர்முன் உள்ளது.

EPRLF இனை LTTE அழிக்க முற்பட்ட போதும் இவ்வாறே நடந்தது. EPRLF - LTTE மோதலின் போது சில EPஉறுப்பினர்கள் சிறிலங்கா அரசு முகாம்களுக்குச் சென்று முறையிட்ட போதும் இராணுவம் வெளிவரவில்லை.

எப்போதுமே சிறிலங்கா அரசினால் LTTE இன் அரசியல் வழிக்கோ, வளர்ச்சிக்கோ தடை இருந்ததில்லை. LTTE இலங்கையில் வாழ்ந்தால்தான், சிறிலங்கா அரசும் வாழ முடியும் என்ற நியாயம் உணரப்பட்டதின் விளைவே இது. இரண்டு பக்கத்திலும் யுத்தம் என்ற பூச்சாண்டியைக் காட்ட முடியாமல் போகும் போது சமரசம் என்ற பேச்சுவார்த்தை நடத்துவார்கள். இப்போதும் அது உடனடியாக நடத்தப்படக் கூடியதாகவே உள்ளது. இந்த வாய்ப்புக்களை 'அடுத்த காலடி'யின் கட்டுரை கூட மறுக்கவில்லை. 'அடுத்த காலடி'யானது அதற்கடுத்த காலடியை வைக்கு முன்னமே சமரசம் வந்து சேர்நது விடலாம். சிலவேளை மீண்டும் போர் தொடங்கலாம். இந்த சமரசத்திற்கும் இப்போதே முற்போக்குச் சாயம் பூசி வைத்திருக்கிறது சமரன் வெளியீடு.

1. இந்த யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினருமே ஒரு நீண்ட யுத்தத்தை நடத்துவதற்கான அந்நிய உதவியை குறிப்பாக இராணுவ உதவியியை நாட வேண்டிய நிலை தோன்றலாம். இந்தக் குறிப்பிட்ட கட்டத்தில் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசிற்கும், விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தைக்கான ஒரு வாய்ப்பு தோன்றலாம். (பக்16)

2. பரந்துபட்ட மக்கள் கூட ஜனநாயக மறுப்பின் காரணமாக அமைப்பு ரீதியாகத் திரட்டப்பட்டு அவ் அமைப்புக்களின் பலனைச் சார்ந்து போரிடுவதற்கு வாய்ப்பு மறுக்கப் படுவதால் தங்களின் விடுதலைக்காகப் போராட முடியாமல் வெறும் பார்வையாளர்கள் என்ற நிலையிலேயே வைக்கப்பட்டுள்ளனர். எந்த ஒரு தேசிய விடுதலை யுத்தமும் ஒரு மக்கள் யுத்தமாகும். எனவே இக் கொள்கை ஈழத்தமிழினம் தேச விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதற்கும் பாதகமாகவும், சமரசத்திற்குப் பணிந்து போவதற்கு வாய்ப்பினை உருவாக்கும் ஒன்றாகவும் இருக்கிறது. (பக் 17)

(குறிப்பு: LTTE இன் வரலாறு முழுவதும் ஈழத்தில் ஜனநாயக மறுப்பின்மை வரலாறே.)

3. குறுந்தேசியவாதக் கண்ணோட்டமும், அனைத்து ஜனநாயக சக்திகளையும் விடுதலைப் போரிற்கு ஆதரவாகத் திரட்டுவதற்குத் தடையாக இருப்பதுடன் அவர்களை எதிரி தன் பின்னால் திரட்டுவதற்கான வாய்ப்பை அளிக்கிறது. ஆகையால் குறுந்தேசியவாதமும், தேசியவிடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதற்குத் தடையாகவும், எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு பணிந்து

www.tamilarangam.net

போவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தக். கூடியதாகவும் இருக்கிறது.(பக் 17)

4. விடுதலைப்புலிகள் அமைப்பு கடைப் பிடிக்கும் அயலுறவுக் கொள்கை குறிப்பாக ஈழத்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைமை அங்கீகரிக்க வேண்டும் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொள்ளாமல், ஏதாவது ஒரு வழியில் உதவியைப் பெறுதல் அல்லது இலங்கை அரசிற்கும் இந்திய அரசிற்கும் இடையிலுள்ள முரண்பாட்டை எப்படியாவது பயன்படுத்தி கொள்வது சாத்தியம் என்ற கொள்கையின் அடிப்படையில், அகில இந்திய, தமிழ் மாநில அரசாங்கங்களுடனும், அரசியல் கட்சிகளுடனும் விடுதலைப் புலிகள் அமைப்பு உறவு கொள்ளும் கொள்கையும், ஈழத் தமிழினம் விடுதலை யுத்ததில் ஊன்றி நிற்பதற்குத் தடையாகவும், எதிரிகளுடன் சமரசம் செய்து கொண்டு பணிந்து போகும் வாய்ப்பை உருவாக்குகிறது. (பக்18)

இவ்வாறு சமரத்திற்கான வாய்ப்பு நிலை எப்போதும் தொடர்ந்து கொண்டிருப்பதாகவே LTTE ஐ தேசிய சக்திகளாகப் பார்க்கும் அடுத்த காலடியின் சமரன் வெளியீடும் சொல்கிறது. ஒரு 'தேசிய சக்தியும் தரகு முதலாளித்துவமும் ' சமரம் செய்து கொள்கிற அடிப்படையிலேயே முரண்பட்ட இந்தக் கருத்தினைக் மக்கள் யுத்தம் குழுவுடன், பாதுகாப்பு பேரவை, NLFT போன்ற அமைப்புக்களும் இறுக்கிப் பிடித்துக் கொண்டு ஈழ தேசவிடுதலைப் போரட்டத்திற்கு 'புதுமை' யான அரசியல் மார்க்கத்தை முன் வைப்பது ஆச்சரியத்திற்குரியதே.

LTTE இன் பத்து வருட காலச் சண்டையின் விளைவு என்ன? இன்றைய யுத்தத்தின் அரசியல் அடிப்படை என்ன? என்பவற்றை எல்லாம் இவர்கள் சிந்திக்க மறுக்கிறார்கள்.

சர்வதேச போதைவஸ்து கடத்தல்காரர்களுடனும், மொசாட் போன்ற சீரழிவுக் கும்பல்களோடும் இறுக்கமான தொடர்புகளை வைத்துக் கொண்டுள்ள இந்தக் கும்பலை எமது தேசத்தின் தேசியமாகத் தம்பட்டம் அடித்துக் கொள்வதில் தமிழ் பேசும் மக்கள் வெட்கித் தலை குனிய வேண்டும். இலாப நோக்கில் மட்டும் மொசாட்டின் ஆயுத விற்பனையில் எத்தனை வீதம் LTTEஇற்குப் போயிருக்கும். விடயங்களையும், சம்பவங்களையும் ஓர் ஆழமான ஆய்வின்றி மேலோட்டமான முடிபுகளை நியாயப் படுத்த முயல்கிறார்கள் இவர்கள்.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் வல்லாதிக்க முக்கியத்துவத்தை நாம் அங்கீகரிக்கிறோம். இந்தியாவின் இந்து சமுத்திர சமாதானக் கொள்கையை வரவேற்கிறோம். இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையை மதிக்கிறோம். இந்தியாவின் பூகோள அரசியல் நலன்களையும், வெளியுறவுக் கொள்கைகளையும் கௌரவிக்கிறோம். (இ.இ ஒப்பந்தம்- வி.பு நிலைப்பாடு பக் 23)

தமது நலன்களுக்காக இந்தியாவின் காலடிக்குள் விழ பிரபாகரனும் விடுதலைப்புலிகளும் எப்போதும் தயாராகவே இருந்தனர்.

இந்திரா காந்தி இறந்து போனபோது பிரபாகரன் ராஜீவிற்கு எழுதிய கடிதம்.

www.tamilarangam.net

(நூல்: பிரபாகரன்- தமிழர் எழுச்சியின் வடிவம் பக் 65)

# இந்தியாவும் - பிரபாகரனும்

இந்தியாவையும் இந்திய மக்களையும் பிரபாகரன் எவ்வாறு நேசிக்கிறார் என்பதற்கு அன்னை இந்திராமறைவின்போது அவர் வெளியிட்ட அறிக்கையே சான்று பகருகிறது. அந்த அறிக்கையின் ஒவ்வொரு வார்த்தையும் அவரது உள்ளத்திலிருந்து வெளிவந்த உணர்ச்சியின் சிதறல்களாகவே காட்சி தருகின்றன.

மறைந்த அன்னை இந்திராகாந்திமீது பிரபாகரனும் அவரது தோழர்களும் அளவுகடந்த மதிப்பு வைத்திருந்தனர். மனிதகுலத்தின் ஒளிவிளக்காக அவரைக் கருதினார்கள். துயருறும் தமிழீழமக்களின்மீது அனுதாபமும், அக்கறையும் கொண்ட மாபெரும் தலைவராகவே அவரைப் போற்றினார்கள். அவர் இறந்த செய்தி பிரபாகரனையும் தமிழீழ மக்களையும் மா பெரும் சோகத்தில் ஆழ்த்திவிட்டது. அதையொட்டி ராஜீவ்காந்தி அவர்கட்கு பின்வரும் உருக்கமான கடிதத்தை பிரபாகரன் எழுதினார்.

அன்புடையீர்!

அன்னை இந்திராகாந்தி கொடிய கொலைஞர்களால் அகால மரணமடைந்த செய்திகேட்டு நாம் ஆழ்ந்த துயரமும் பேரதிர்ச்சியுமுற்றோம். மனித சமூகத்திற்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமான இக்கொலை பாதகச் செயலை நாம் வன்மையாகக் கண்டனம் செய்கிறோம்.

ஒடுக்கப்பட்ட மனிதகுலத்தின் ஒளிவிளக்காகவும், பாரததேசத்தின் உன்னத ஆத்மாவாகவும் திகழ்ந்த ஒரு ஒப்பற்ற பெரும் தலைவரை நாம் இழந்து நிற்கிறோம். தங்கள் குடும்பமும் இந்திய மக்களும் உலகமும் இந்த ஈடு செய்ய முடியாத பேரிழப்பால் அடைந்திருக்கும் ஆழ்ந்த துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

திருமதி. இந்திராகாந்தி உலக சமாதானத்திற்காகவும், மனித சுதந்திரத்திற்காகவும் அயராது போராடிய வீராங்கனையாவார். ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் ஏகோபித்த குரலாகத் திகழ்ந்தார். தீர்க்கதரிசனத்தோடும் பூரண அர்ப்பணிப்போடும் பாரத தேசத்தை சோசலிசப் பாதையில் நிர்மாணம் செய்ய அயராது உழைத்தார். நவபாரதத்தின் சிற்பியாகத் திகழ்ந்தார். இந்தியத் துணைக்கண்டத்தில் ஏகாதிபத்தியத்தையும் அதன் பேராதிக்க சதி வலைப்பின்னலையும் அவர் முழுமூச்சாக எதிர்த்து வந்தார். தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உலககெங்கும் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களை அவர் முன்னின்று ஆதரித்துவந்தார்.

அநாதரவான நிலையில் துயருறும் தமிழீழ மக்களின்பால் அன்னை இந்திராகாந்தி எப்போதுமே அனுதாபமும் அக்கறையும் காட்டிவந்திருக்கிறார். ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து வருவதனை அவர் எப்போதுமே கண்டித்தார். தமிழ் மக்களின் மீதான இனப் படுகொலையை நிறுத்தியாகவேண்டும் என்று அரசியல் ராஜதந்திர வழிகளில் அவர் ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்தித்தார். இந்தியாவின் நல்லெண்ண அனுசரணையின்கீழ் தமிழ்மக்களின் பிரச்னைக்கு பேச்சு

www.tamilarangam.net

வார்த்தை மூலம் தீர்வு காண்பதற்குத் தனிப்பட்ட முறையில் பெரும் அக்கறை செலுத்தினார். தமிழ் மக்களின் பெருங்காவலராகத் திகழ்ந்த அன்னை இந்திராவின் தனிப்பட்ட அக்கறை மட்டும் இல்லாது போயிருந்தால் எமது தேசமே அழிந்துபோயிருக்கும். தமிழ் விடுதலை இயக்கத்தின் ஆத்மீக வலிமையின் கோபுரமாக அவர் திகழ்ந்தார்.

தமிழ்மக்கள் இந்திராவை என்றும் அன்புடனும், நன்றியுடனும், பெரு மதிப்புடனும் நினைவுகூர்வார்கள். தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள நீங்கள், எந்த உன்னத இலட்சியங்களுக்காக அன்னை இந்திராகாந்தி வாழ்ந்து, போராடி, இறந்தாரோ அந்த இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வீர்கள் என்றே நாம் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

நீங்கள் வெற்றிபெற எமது நல்வாழ்த்துக்கள்''.



இவர்கள் தங்கள் குழு நலனுக்காக எப்போதும் எந்த சக்திகளுடனும் கூட்டுச் சேரத் தயாராக இருந்தார்கள். ஏகாதிபத்தியங்களுக்கும் ஈழத்தின் சமூகப் பாசிச சக்திகளான LTTE இன் வாசல் கதவு எப்போதும் திறந்தே கிடக்கும்

IPKF தனது இராணுவ சர்வாதிகாரத்தை தமிழ் பேசும் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டு நூற்றுக்கணக்கில் நாளாந்தம் மக்களைப் பலி எடுத்துக் கொண்டிருந்த வேளையில் 13.04.89 அன்று நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு பிரேமதாச அரசு LTTE இற்கு அழைப்பு விடுத்தது.

இது தொடர்பாக LTTE 16.04 89 'உதயன்' நாளிதழில் வெளியிட்ட அறிக்கையில், 'சமரசப் பேச்சுவார்த்தைக்கு வருவதென்றால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, இந்திய இலங்கை உடன்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்திய அரசு நிபந்தனை விதித்தது. ஆனால் இலங்கை அரசு அது போலன்றி விடுதலைப் புலிகள் கோரிய முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் சம்மதித்து விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறது. எனவே விடுதலைப் புலிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கெண்டிருக்கின்றனர்'.

உண்மையில் 13.04.89 அன்று பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு

www.tamilarangam.net

விடப்பட்ட போதிலும், அதற்கு முன்னரேயே இலங்கை- LTTE பேச்சுவார்த்தைகள் இரகசியமான முறையில் நடந்தன. மார்ச் 1990 இல் IPKF இலங்கையை விட்டு வெளியேறிய பின்னரும் இப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. முதலில் குறிப்பான மூன்று அம்சங்களை LTTE முன் வைத்தது.

1. இந்தியப் படை முற்றாக வெளியேற வேண்டும்.

2. TNA, CVF கலைக்கப்பட வேண்டும்.

3. வட கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு, அங்கு முறையான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுள் முதலிரண்டும் முற்றாக நிறைவேறியது. மூன்றாவது கோரிக்கைக்கு ஆறாவது திருத்தச் சட்டம் இலங்கை அரசியலமைப்பிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று LTTE கூறியது.

இதன் பிறகு யாழ்ப்பாணத்திற்கு இலங்கை அமைச்சர்கள் வந்து போயினர். LTTE கொழும்பில் தனது முகாம்களை நிறுவிக் கொண்டது. கொள்ளுப்பிட்டியில் இலங்கை புலனாய்வுத்துறையின் (Pational Interlligent Bureau) தலைமை அலுவலகத்திற்கு அருகாமையிலும், கொட்டாஞ்சேனையிலும் LTTE தனது பிரதான முகாம்களை அமைத்துக் கொண்டது. ஈழத்திலும், கொழும்பிலும் உள்ள LTTE இற்கு எதிரானவர்களையும், தமிழ் மண்ணின் தேச பக்தர்களையும் சிறிலங்காப் பாசிச அரசுடன் இணைந்து வேட்டையாடியது. PLOT துரோகிகளின் கொழும்பிலுள்ள நிலைகள் மீது சிறிலங்கா பொலிஸ் படையுடன் இணைந்து தாக்குதல் நடத்திற்று. ஆனால் யாழ்ப்பாணத்தில் PLOT இனால் தேடப்பட்டு வந்த தீப்பொறிக் குழுவிலிருந்த உறுப்பினர்களைக் கைது செய்தது. தர்மலிங்கம் என்பவர் கைது செய்யப்பட்டார். தேசிய சக்தி என்று LTTE ஐ நியாயப்படுத்திய NLFT யைச் சேர்ந்த ரமணி (செல்வக்குமார்) கைது செய்யப்பட்டார். இன்னும் LTTE இடம் ஜனநாயகம் கோரிய, சிறிலங்கா அரசிற்கு எதிரான நூற்றுக்கணக்கான தேச பக்தர்களை தெருத் தெருவாக எரித்துப் போட்டது. தமிழ்ப் பகுதிகளில் அமைதி நிலவிற்று!! மயான அமைதி.

TNA, CVF என்பவற்றில் EPRLF, ENDLF ஆகியவற்றில் பலவந்தமாக, பயமுறுத்தி துப்பாக்கி முனையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பல இளைஞர்கள் மீது சந்தேகப்பட்டு, துரோகிகள் என்ற பெயரில் LTTE கொன்று போட்டது.

LTTE இற்கு எதிராக அம்பாறை மட்டுநகர் பகுதியல் சண்டையிட்டுக் கொண்டிருந்த, சரணடைந்த பல TNA உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். IPKF இருந்த போது தெருக்களில் மனித இரத்தம் உறைந்து போனது. IPKF போன பிறகு தேசம் முழுவதும் பிணவாடை வீசிற்று. ஒரு புறத்தில் பிணவாடை, மறுபுறத்தில் பேச்சுவார்த்தையும் அரசியல் கூட்டங்களும். இது தொடர்பாக விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தையா சிறி) 15.05.90 விடுதலைப்புலிகள் பத்திரிகையில் விடுத்த அறிக்கையில்

"நாம் தலைமறைவு வாழ்க்கையிலிருந்து அண்மையில் தான் வெளிப்படையாக

www.tamilarangam.net

இயங்க ஆரம்பித்துள்ளோம். எம்மால் முழுமையாக துரோகிகளையும், சந்தர்ப்பவாதிகளையும் இனங்காண முடியாது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால் எமது மக்கள் எடுத்துரைத்தால் இவர்களை நாம் இனங் கண்டு கொள்ளலாம்.(பக் 5)

'இவர்கள் இனங் காணப்பட்டு அழிக்கப்பட வேண்டியவர்கள் இல்லையேல் நாம் அரும்பாடுபட்டு பல தியாகங்களுக்கு மத்தியில் கண்டுள்ள வளர்ச்சி இவர்களால் அழிக்கப்படும்'

துரோகிகள் தியாகிகள் என்ற பெயரில் பல தேச பக்தர்கள் அழிக்கப்பட்டார்கள். இவை எல்லாம் தேசிய சக்திகளின் வீரம் செறிந்த வரலாற்றின் எந்த அத்தியாயத்தில் எழுதப்படப் போகிறது? இதனையே 'அடுத்த காலடி'யின் கட்டுரை.

'LTTE இன் குறுந்தேசியவாதக் கண்ணோட்டம் அனைத்து ஜனநாயக சக்திகளையும், விடுதலைப் போருக்கு ஆதரவாக திரட்டுவதற்கு தடையாக இருப்பதுடன் அவர்களை எதிரி தன் பின்னால் திரட்டிக் கொள்வதற்கான வாய்ப்பை அளிக்கிறது'

பாசிச அரசின் பின்னால் ஜனநாயகவாதிகளாக ஈழத்திலுள்ள ஜனநாயகவாதிகளை கொச்சைப் படுத்துவது மிகவும் மிலேச்சத்தனமானது.

LTTE இன் குழு நலன்களைத் திருப்திப்படுத்துகின்ற ஏகாதிபத்தியங்களினதும், LTTE இனதும் திட்டமிடப்பட்ட இந்த நாடகங்களை 'சமரனும்' 'அடுத்த காலடி'யும் மூடி மறைத்திருக்க வேண்டாம்.

இந்தப் பேச்சுவார்த்தை இடைக்கட்டத்தில் நூற்றுக்கணக்கான ஜனநாயகப் படுகொலைகளை அரங்கேற்றிய LTTE ஆரம்பத்தில் சிறிலங்காவின் அரசமைப்புக்குள் தனது குழு நலனை திருப்திப்படுத்திக் கொள்ள முனைந்தது.

'ஜனாதிபதி பிரேமதாசா மீது நம்பிக்கை வைத்தே பேச்சுவார்ததையைத் தொடர்கிறோம்.

'இந்தியாவுடன் நாம் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கும், இலங்கை ஜனாதிபதியுடன் நாம் நடத்தும் பேச்சு வார்த்தைகளுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இது நிபந்தனையற்ற பேச்சு வார்ததை. வடக்கு கிழக்கு மகாணங்கள் இந்தியாவின் ஒரு பகுதியாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த ஜனாதிபதி இந்தியப் படையை வெளியேற்ற விரும்பினார். அத்துடன் இலங்கைப் பொருளாதாரமும் மோசமான நிலையை அடைந்து கொண்டிருக்கிறது. எனவே எம்முடன் ஒரு இணக்கமான தீர்வை எற்படுத்த அவர் முற்பட்டார். அவர் நல்ல முறையில் எம்மை வரவேற்கிறார்' (பரமமூர்த்தி வி.பு.ம.கு உறுப்பினர்) வீரகேசரி 10.03.90)

'ஜனாதிபதி பிரேமதாசவுடன் நடக்கும் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கையளிப்பதாகவும், பரம திருப்தியாகவும் உள்ளது' -பிரபாகரன்.(02.04.90 வீரகேசரி.

'ஜனாதிபதி பிரமதாசவின் துணிச்சலை நாம் பாராட்டுகிறோம் அவர் மீது பூரண நம்பிக்கை வைத்திருக்கிறோம்' - பிரபாகரன் (02.04.90 வீரகேசரி)

'யார் இப்போது ஈழம் கேட்கிறார்கள்? இந்திய ஆதரவான ஆயுதம் ஏந்திய குழுக்களே ஈழம் கேட்கிறார்கள். நாங்கள் ஆயுதங்களை வைத்திருப்பது பற்றியோ இலங்கை அரசுடன் தான் கதைப்போம். பிரேமதாசா இலங்கை ஜனாதிபதி. அவர்

www.tamilarangam.net

எங்களுடைய ஜனாதிபதி. நாங்கள் அவர் மீது முழுமையான நம்பிக்கை வைத்திருக்கிறோம். இலங்கையில் ஒன்றுமையைக் கொண்டு வரவும் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் பிரேமதாசா உறுதியாக இருக்கிறார். பிரேமதாசா நிச்சயமாக தமிழர்களின் குறைகளைத் தீர்ப்பார் - பாலசிங்கம் (16.07.89 சண்டே ஒப்சேவர்)

'பிரேமதாசா உறுதியளித்தபடி தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றங்கள் எதுவும் நடாத்தப்படாமை நம்பிக்கையளிக்கிறது' - மூர்த்தி.

தமிழ் பேசும் மக்களையும் சிங்கள மக்களையும், பிரேமதாசா - LTTE பேச்சுவார்த்தை நாடகத்தின் மூலம் ஏமாற்றிய இந்தக் கூட்டுக் கும்பல், மறுபடி யுத்த நாடகத்தை ஆரம்பித்து அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது. பல சிறுவர்கள் போரளிகளாகி உயிரிழந்து போகின்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் அநியாயமாக அர்த்தமின்றி இறந்து போயினர். குடியேற்றங்கள் வழமைபோல 'ஜிகாத்', EPDP, ENDLF, TELO, EPRLF எல்லாம் இராணுவ வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன. மக்கள் பல துப்பாக்கிகளுக்கிடையில் அநாதைகளாக!

சமூகப் பாசிஸ்டுக்களின் சண்டையில் அவர்களின் அரசியல் மார்க்கத்திற்கோ, சிறிலங்கா அரசின் அரசியல் வழிக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. பாதிக்கப்பட்டது தேச விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியும், தேச மக்களும்தான்.

இப்போதெல்லாம் யார்யார் அய்க்கிய முன்னணி அமைத்துக் கொண்டாலும், சியாங் கை ஷேக்கையும், மாவோ சேதுங்கையும் குரல்வளையில் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து நிறுத்துகிறார்கள். அங்கே சீனாவின் பொதுவான குறிப்பான சூழல், கோமின்டாங் கட்சி, சியாங் கை ஷேக்கிற்கும் பின்னாலிருந்த சமூக சக்தி, கம்யூனிஸ்ட் கட்சியின் பலம், பலவீனம், நிரப்பிரபுத்துவம், தரகு முதலாளித்துவத்தின் பலம், பலவீனம் எது பற்றியுமே சிந்திக்காமல், சியாங்கை ஷேக்கையும் - மாவோ சேதுங்கைப் பற்றியும் மட்டுமே பேசுகிறார்கள். இந்த இரண்டு ஆசாமிகளும் ஏதோ வேலிப் பிரச்சனையில் அய்க்கிய முன்னணி அமைத்துக் கொண்டது போல.

"யப்பானியர்கள் சீனாவை ஆக்கிரமித்த போது நிலப்பிரபுத்துவத்தைக் தகர்த்து எறிந்து புதியதோர் சமூகத்தை அமைக்க புரட்சிகர யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாவோ சேதுங்கும், நிலப்பிரபுத்துவத்தை தாங்கி நின்ற அரசிற்குத் தலைமை வகித்த சியாங் கை ஷேக்குடன் யப்பானியர்களுக்கு எதிராகத் தேசிய யுத்தத்தை நடத்த யுத்த தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கு வந்த நிகழ்வும், விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசு அரசு பேச்சுவார்த்தை நிகழ்வும் வரலாற்று ஒற்றுமைத் தன்மையினைக் கொண்டுள்ளன. பிற்போக்கு அரசிற்கு உடன்பாட்டிற்குப் போவதா என மாவோ யுத்த தவிர்ப்பிற்கு மறுத்திருந்தால் மாவோவின் ஜனநாயகப் புரட்சி வெற்றிப்பாதைக்கு சென்றிருக்குமா? என்பது சந்தேகத்திற்குரியதே. சூழ்நிலைகளுக்கேற்ப பொருத்தமான தேவையான அரசியல் நகர்வுகளை தந்திரோபாய ரீதியல் மேற்கொள்ளல் போராட்டத்தை வெற்றிகரமாக

www.tamilarangam.net

முன்னெடுக்க அவசியமானது என்பதனை சீனா உதாரணம் நிரூபிக்கிறது.

(விடுதலைப் புலிகள் சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை. வெளியீடு வி.பு. பக் 3)

இங்கே பிரபாகரன் மாவோவாகவும், பிரேமதாசா சியாங்கை ஷேக்காகவும் கற்பனை செய்யப்படுகிறது.

'சீனாவில் யப்பானிய எதிர்ப்பு யுத்த காலத்தில், சீனப் பாட்டாளி வர்க்க இயக்கம், யப்பானியப் பாசிச ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து சியாங் கை ஷேக்குடன் ஒரு முன்னணியை கட்டும் செயல்தந்திரத்தை மேற் கொண்டது போல இந்திய மேலாதிக்கத்தையும் இந்தியப் படையின் ஆக்கிரமிப்பையும் எதிர்த்த போராட்டத்தில் ஈழ மற்றும் இலங்கைப் பாட்டாளி வர்க்க இயக்கம் ஒரு அய்க்கிய முன்னணியைக் கட்டும். இங்கே செயல் தந்திரத்தை மேற் கொள்வது சரியானது என சீனப் புரட்சியின் அநுபவங்கள் எமக்கு காட்டுகின்றன.'

இங்கே தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை (TMPP), NLFT போன்றவை ஈழப் பாட்டாளி வர்க்க இயக்கமாகவும், பிரபாகரனை சியாங் கை ஷேக்காகவும் கற்பனை செய்யப்படலாம்.

எத்தனை சியாங் கை ஷேக்குகளும் எத்தனை மாவோக்களும் தெற்காசியாவின் ஒரு கொல்லைப் புறத்தில் வெற்றி நடை போடுகிறார்கள்? பாவம் மக்கள்!

1923ம் ஆண்டு சன்யத்சேன் என்பவரால் தலைமை தாங்கப்பட்ட கோமின்டாங் என்ற ஜனநாயகவாதிகளின் கட்சியுடன் அய்க்கிய முன்னணி கட்டுவது தொடர்பான பிரச்சனையை ஆராய்வதற்காக கண்டான் என்ற இடத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாவது மாநாடு கூட்டப்பட்டது.

சன்யன்சேன் என்பவர் சீனாவிலிருந்த ஒரு சிறந்த தேசியத் தலைவர். ஒரு நல்ல தேசியத் தலைவனாக இருப்பது எப்படி? என்ற கேள்விக்கு டாக்டர் சன்யத்சேன் என்பவரது வரலாறு விடை கொடுக்கும். வாழ்நாள் முழுவதும் தேச நலனுக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒரு மிகச் சிறந்த தேசியத் தலைவர் சன்யத்சேன். இவரிடமிருந்த தத்துவார்த்த தவறுகளும், போராட்டம் தொடர்பான சரியான தத்துவார்த்த வழிமுறையின்மையும் ஒரு புறமிருக்க, இவரிடமிருந்த தலைமைக்குரிய பண்புகள் மதிப்புக்குரியவை.

1905 இல் டுல் மெல்ஹீயூ என்று அழைக்கப்பட்ட புரட்சிக் கழகத்தை ஆரம்பித்து நிலப்பிரபுத்துவத்திற்கு எதிரான பல போராட்டங்களை சன்யெத்சேன் நடத்தினார். 1911ம் ஆண்டு ஜனநாயகப் புரட்சி வெற்றி பெற்றது. ஆனால் சன்யத்சென்னின் அதிகமான நெகிழ்ந்து கொடுக்கும் தன்மை காரணமாக புரட்சியின் வெற்றி எதிர்ப் புரட்சியாளர்களின் கைக்கு மாறியது.

பின்னர் 1923 இல் சன்யெத்செனினால் தலைமை தாங்கப்பட்ட கோமின்டாங்குடன் கம்யூனிஸ்ட் கட்சி அய்க்கிய முன்னணி அமைத்துக் கொண்டது. கோமின்டார்ங் கட்சிக்குள் கம்யூனிஸ்ட கட்சியின் அங்கத்தவர்களை அதன் சகல கட்சி அங்கத்தவர்களுள்ளும் (மத்திய கமிட்டி உட்பட) உள் வாங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதனால் இக் கட்சிக்குள் ஒரளவு பலம் வாய்ந்த நிலையிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குச் செலுத்தும் சாத்தியம் ஏற்பட்டது. கோமின்டாங் கட்சி ஒரு அய்க்கிய முன்னணியாக விளங்கிற்று.

www.tamilarangam.net

1926 இல் நடந்த கோமின்டாங் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் (டாக்டர் சன்யாத்சென்னின் இறப்பிற்குப் பிறகு) சியாங் கை ஷேக் அதன் மத்திய கமிட்டி உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். சியாங் கை ஷேக் தொடர்பாக நவசீனப் புரட்சி வரலாறு எனும் நூலில் ஹோகான்சி என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'சியாங் கை ஷேக் புரட்சி முகாமில் ஒரு வீர செயல்வாதியாகவும், தன் முன்னேற்றத்தில் நாட்டம் உடையவராகவும் இருந்தார். 1911ம் ஆண்டு நடந்த புரட்சி தோற்ற சமயத்தில் அவர் ஷால்காய் பங்கு மார்க்கட்டில் ஒரு புரோக்கராக இருந்தார். சோவியத் யூனியனோடு கூட்டாளியாக சன்யத்சேன் பின்பற்றிய போது சியங் கை ஷேக் அது தனக்கு தனிப்பட்ட லாபகரமான வேலையாக இருக்கும் என்று கருதி வேலை செய்தான்.

எனவே சியாங் திட்டமிட்டு கட்சிக்குள் ஊடுருவியவன் என்றே பலராலும் நம்பப்படுகிறது. ரஷ்யாவுடன் கூட்டணி, கம்யூனிஸட் கட்சியுடன் நட்புறவு, முதலாளி விவசாயிகளின் நலன் பேணல் என்ற சன்யத்சேனின் கோட்பாடுகளை சியாங் தூக்கி எறிந்து நடக்கத் தொடங்கினான்.

1927 ஆரம்பப் பகுதியில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக அவன் நேரடியாக நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஏகாதிபத்தியம் சார்ந்த நிலை எடுத்ததிலிருந்து, சியாங் கை ஷேக்கிற்கும், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் முரண்பாடு முற்றியது.

இங்கே ஈழத்தில் பிரபாகரனை சியாங் கை ஷேக் என்று சமரன் சொன்னால் அது சாலப் பொருந்தும். ஆனால் LTTE கோமிண்டாங் ஆகி விடாது. ஒரு தேச விடுதலை இயக்கத்திற்குரிய நெகிழ்ந்து கொடுக்கும் ஜனநாயகத் தன்மை எதுவுமே LTTE என்ற சீரழிவுக் கும்பலிடம் இல்லை. சிறிலங்கா அரசைப் போலவே தன்னுடைய இலாபத்திற்காக ஏகாதிபத்தியங்களுடனும், அதன் அடிவருடிகளுடனும் கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கிற ஒரு சமூகப் பாசிச தனிநபர் ஆயுதக்குழு

இங்கு LTTE இனர், பிரேமதாசவுடன் ஏற்படுத்திய அய்க்கியம், பேச்சுவார்த்தை நாடகம் அல்லது LTTE பிரேமதாசா தேன் நிலவு (நன்றி UTHR அறிக்கை) என்பது ஒரு தந்திரோபாயக் கூட்டணி அல்ல. LTTE தனது குழு நலனுக்காக தான் விசுவாசமாகவே ஏற்படுத்திக் கொண்ட ஒரு கூட்டணி. இந்த விசுவாசத்தைப் புலிகள் - சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை என்ற நூலில் நியாயப்படுத்தி எழுத்துருவில் தருகிறது விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு.

இன்று பத்து வருட கால ஆயுதப் போராட்டத்தின் அரசியல் விளைவாக தமிழ் ஈழ தேசிய விடுதலைப் போராட்டம் காட்டிக் கொடுக்கப்பட்டு சீரழிக்கப்படுகிறது. பல ஆயிரக்கணக்கான இனிய உயிர்கள் அநாவசியமாகப் பலியிடப்பட்டிருக்கின்றன.

LTTE இன் பாசிசப் போக்கினை குறுந் தேசியவாதமாகச் சிலர் பார்ப்பது அடிப்படையில் தவறானதாகும். இது குறுந் தேசியவாதமல்ல. ஒரு குறுந்தேசியவாத அடிப்படையிலான அமைப்பு ஏனைய தேசிய இனங்களை தனது தேசிய இனத்தின நலனுக்காகப் பயன் படுத்திக் கொள்ளும். ஆனால் LTTE மற்றைய

www.tamilarangam.net

தேசிய இனங்களை முற்றாக அழித்தொழிக்க முற்பட்டு தமிழீழ மக்களின் மொத்த தேசியநலனுக்கு எதிராக செயற்பட்டிருக்கிறது. தமிழ் பேசும் முஸ்லீம் மக்கள், தமிழ் பேசும் பூர்விக இனத்திற்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளியை ஏற்படுத்தி, போராட்டத்தைக் காட்டிக் கொடுத்திருக்கிறது. இது LTTE இன் தலைமைக்குத் தெரியாததது அல்ல. மொசாட் மற்றும் ஏகாதிபத்தியங்களுக்கு தனது விசுவாசத்தைக் காட்டிக்கொள்ள எடுத்த நடவடிக்கையின் ஒரு பகுதியே இது. இந்திய ஆயுதத்திற்காக அநுராதபுர சிங்களவர் படுகொலை, மொசாட்டிற்காக முஸ்லிம் இன அழிப்பு, LTTE இன் வரலாறு படைத்த சாதனைகள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சீர் குலைப்பதில் LTTEஇன் பங்களிப்புக்கள்.

1* மக்களமைப்புக்களுக்கும், போராட்டம் தொடர்பான கருத்துக்களும் வளர்ந்து கொண்டிருந்த நிலையில் வெறுமனே இராணுவ நோக்கில் 83 யூலை திருநெல்வேலி தாக்குதல்களை நடத்தி, போராட்ட அமைப்புக்களைப் பாய்ச்சல் நிலையில் வீங்கச் செய்து அரசியல் தேவையை விட இராணுவத் தேவையை வளர்த்து விட்டமை.

2* ஏனைய இயக்கங்களையும் அதன் ஆதரவாளர்களையும் அழித்தொழித்துப் பல சமூக உணர்வும் தேச பற்றும் உள்ள நபர்களைப் போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தியமையும், திசை வழியில்லாது மக்களைப் பற்றியும் போராட்டம் பற்றியும் பேசிக் கொண்டிருந்த இயக்கங்களை ஏகாதிபத்தியங்களினதும், உளவு நிறுவனங்களினதும், அரசினதும் பிடிக்குள் சிக்க வைத்தமை.

3* சிறு குழுக்களாகவும் உதிரிகளாகவும் கிடந்த தேசப்பற்றும் சமூக உணர்வும் உள்ள சக்திகளை தேடித்தேடி அழித்தும், கருத்துச் சுதந்திரத்தைப் பறித்தும் போராட்டத்தை சீர் குலைத்தமை.

4* அப்பாவி சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடாத்தியும், கற்பழிப்பு, கொலை, கொள்ளை போன்றவற்றை நடாத்தியும், இலங்கை பூராகவும் பரந்து கிடந்த மனிதாபிமானமுள்ள போராட்டத்திற்கு ஆதரவான சிங்கள மக்களை போராட்டத்திற்கு எதிராக திசை திருப்பியமை.

5* இஸ்ரேலிய உளவுப்படையிடமும், சர்வதேச நாசகார சக்திகளிடமும் ஆழமாகத் தொடர்பு வைத்துக் கொண்டு, சர்வதேசிய முற்போக்கு சக்திகளிடமும், விடுதலை இயக்கங்களினதும் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டமை.

6* போராட்டத்திற்குப் பணம் சேர்த்தல் என்ற பெயரில், போதை வஸ்துக் கடத்தியும், சர்வதேச சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டும், உலகெங்கும் பரந்து கிடக்கும் மனிதாபிமானிகளின் தீவிர வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டமை.

7* சொந்த மக்கள் மீது போராட்டம் என்ற பெயரில் பணப்பறிப்பு, ஆள்கடத்தல், வரிவிதிப்பு போன்ற சமூக விராதச் செயல்களில் ஈடுபட்டு போராட்டத்திலிருந்து முழுமையாக மக்களை அந்நியப்படுத்தியமை.

8* முஸ்லீம் தேசிய இனத்தை தமது சொந்த மண்ணை விட்டு, துரோகிகள் என்ற பெயரில் இரவோடு இரவாக விரட்டியடித்தும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற மிலேச்சத்தனமான

www.tamilarangam.net

செயல்களில் ஈடுபட்டும், முஸ்லீம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே இருந்த சந்தேகப் பார்வையை நீண்ட காலத்திற்கு நிரந்தரமாக்கி, அந்த மக்களை போராட்டத்திற்கு எதிராகத் திசை திருப்பியமை.

9 * இந்தியாவிலுள்ள நச்சு அரசியல்வாதிகளுடனும், நாசகார சக்திகளுடனும் கூட்டுச் சேர்ந்தும் இந்திய மண்ணில் வெறுக்கத்தக்க வன் முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டும் இந்திய தமிழர்கள் ஈழப் போராட்டத்திற்கு வழங்கி வந்த மறுதலையான ஆதரவை வெறுப்பாக மாற்றிக் கொண்டமை.

தனது வரலாறு முழுவதையுமே கொலைக் கலாச்சாரத்தின் வரலாறாக முன்நிறுத்தியுள்ள LTTE இன் சண்டை போடும் இயல்பை மட்டும் வைத்துக் கொண்டு இதனை ஒரு தேச விடுதலை இயக்கமாகப் பாராமல் அது சார்ந்துள்ள வர்க்கத்தையும் மதிப்பீடு செய்வதில் சரியான அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

1.முதலில் எந்த ஒரு நாட்டினச் சிக்கலையும் பற்றி ஆராயும் போது அதை திட்டவட்டமான வரலாற்று எல்லைக்குள் வைத்து அதாவது அந்த நாடு எந்த வரலாற்றுக் கட்டத்தை கடந்து கொண்டிருக்கிறது என்ற பின்னணியில் ஆராய வேண்டும்.ஒரு நாட்டிற்கு ஒரு கட்டத்தில் பொருந்திய தீர்வு இன்னொரு கட்டத்தில் பொருந்திவராது.

2. ஒரே வரலாற்றுக் கட்டத்திலுள்ள இரு நாடுகளில் ஒரு நாட்டை இன்னொரு நாட்டிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் சிறப்பியல்புகளை கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

3. தேசிய இயக்கங்களைப் பொறுத்தவரையில் முதலாளித்துவத்தின் இரு கால கட்டங்களை வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

4. பல்வேறு நாடுகளில் தேசிய சிக்கலை ஒப்பிட்டுப் பார்க்கும் போது சம்பந்தப்பட்ட நாடுகளில் வளர்ச்சிக் கட்டங்கள் ஒப்பிடக் கூடியவைதானா எனப் பார்க்க வேண்டும். ஒரு நாட்டிற்குப் பொருந்திய தீர்வு அப்படியே வேறொரு நாட்டிற்குப் பொருந்தாது.

நன்றி "தேசிய இன சுய நிர்ணய உரிமைப் பிரச்சனையும் முதலாளித்துவ தேசிய வாதமும்"

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சி-
(மார்க்ஸிட்- லெனினிஸ்ட்)
(மக்கள் யுத்தம்) -(சமரன் வெளியீடு)

நாம் இதுவரை காலப் போராட்டத்தில் முற்போக்கு சக்திகளின் தோல்விகளில் ஏற்பட்ட விரக்திகளை மட்டும் கருத்திற் கொண்டு LTTE அய்த் தரகு முதலாளித்துவ சக்தியாக கருதவில்லை. இன்றைக்கும் LTTE தேசிய சக்தி என நிறுவப்பட்டால் அதன் தேசியத் தன்மையோடு ஒன்றுபடத் தயாராகவே உள்ளோம். ஆனால் LTTE ஏகாதிபத்திய விசுவாசப் போக்கானது மிகவும் வெளிப்படையாகவே நிரூபிக்கப்பட்ட பிறகு இன்னும் LTTEயைத் தேசிய சக்தியாக நியாயப்படுத்த முயல்வது அசட்டுத்தனமானதே. இருப்பினும் முடிபுகளை முடிந்த முடிவாக முன் வைக்காமல் அனைத்து தேசப் பற்றுள்ள சக்திகளின் மத்தியிலிருந்தும் ஆரோக்கியமான கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.

www.tamilarangam.net

## உங்களுடன் சமர்

# சதித் திட்டமா?

சமர் இதழ் ஒன்றிற்கும் இதழ் இரண்டிற்குமிடையே நீண்ட இடைவெளி. இடையே கொக்கட்டிச்சோலையில் குருதிவெள்ளம் நூற்றுக்கணக்கில் மனித உயிர்களைப் பலிகொடுத்தபோது இதயம் இரும்பால்அறையப்பட்டது. ரஞ்சன் விஜேரத்தினா இறந்துபோனான். "நேர்மையான அரசியல்வாதி", "ஜனநாயகத்தின் பாதுகாவலன்" என்று வாழ்த்துப் பாடிய கொழும்பு தமிழ் துரோகக் கும்பல்கள் ஒவ்வொரு தமிழனையும் வெட்கித் தலைகுனிய வைத்தன. ராஜீவ்காந்தி கொலை! இதே புகழுரைகள். ஈழம் மறுபடியும் சிரித்துக்கொண்டே அழுதது. தென்னிந்தியாவில் நிறையத் தமிழர்களைக் காணவில்லை. தேடப்பட்டார்கள்! சாகவில்லை; கொல்லப்பட்டார்கள். கொழும்பில் குண்டு வெடித்தது இதே நிலை! ஆனையிறவில் ஆயிரக்கணக்கில் பிணக்குவியல்கள் ஒருகாலத்தில் உப்பு விளைந்த நிலம் இன்றைக்கு பிணங்களை விளைவித்துக் கொண்டது. நல்ல இயற்கை உரம் இனிமேல் புற்களும் விளையும்! எமது தாய்நிலம் சுடுகாடு. எமது கலாச்சாரம் கொலைக்கலாச்சாரம், எமது தேசிய தொழில் கடத்தல், மிரட்டல், கொலை, கொள்ளை!

ஆம் ஈழப்போராட்டம் சீரழிக்கப்பட்டுவிட்டது. இனிமேலும் முளைவிடாதபடி ஒரு தலைமுறை கொல்லப்படுகிறது. திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. போராட்ட உணர்வுள்ளவர்கள் தேசபக்தர்கள் தெரிந்தெடுத்துக் கொலை செய்யப்படுகிறார்கள். வெளிப்பார்வைக்கு அரசு - புலிகள் மோதல் எனத் தென்படலாம். ஆனால் ஒரு சந்ததி வேண்டுமென்றே அழிக்கப்படுகிறது. ஆனையிறவில் பலிகொடுத்த உயிர்களுக்கு பிரபாகனின் கும்பல் ஈழத் தேசத்திற்கு எதனைப் பெற்றுத்தந்தது?

இந்தச் சண்டை தொடங்கிய பிறகு பலிகொல்லப்பட்ட உயிர்கள் எத்தனை?

சாகடிக்கப்பட்ட முஸ்லீம் மக்களின் உயிர்களுக்கு LTTE என்ன விலை தரப் போகிறது? ஜிகாத் என்ற கொலைக்களத்தில் ஆயிரக்கணக்கில் இளம் தமிழ் பேசும் முஸ்லீம் சந்ததி திட்டமிட்டு பலியிடப்படுகிறது. தமிழ் இளைஞர்கள் பலியெடுக்கப்படுகிறார்கள். EPDP, ENDLF, TELO, PLOT, EPRLF, EROS என்ற தலையங்கங்களில் எத்தனை உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன.

www.tamilarangam.net

மலையகத்திலும் பிணவாடை வீசத் தொடங்குகிறது. இன்னும் JVPகொலையை பிரேமதாசா முடித்துவிடவில்லை! TNA, JVP, EPRLF, ENDLF, PLOT, TELO, EPDP, IPKF, LTTE, EROS, ஜிகாத், சிறிலங்கா அரசு இவையெல்லாம் ஒரு குறித்த ஐந்து வருடங்களுக்குள் பல ஆயிரக்கணக்கில் ஒரு குறித்த வயது மனித உயிர்களை தியாகம் என்ற பெயரிலும், துரோகம் என்ற பெயரிலும் பலிகொடுத்தும், பலியெடுத்தும்விட்டன. இளம் சமுதாயத்தின் இந்த அழிவுகள் ஈழப்பிரதேசத்தில் புரட்சியை மழுங்கடிக்கும் மேலாதிக்க சக்திகளின் நீண்டகால கூட்டுச்சதித்திட்டமா? முஸ்லீம் தேசியஇனம் ஒருபகுதி LTTE இன் கொலைப்பசிக்கு! மறுபகுதி ஜிகாத் - முஸ்லீம் காங்கிரஸ் - UNPஇன் இனவெறிக்கு!

அதன் உச்சநிலைதான் இப்போது அரங்கேறுகிறதா? இப்படியே இந்தப் போராட்டம் முற்றாக முளைவிட முடியாதபடி அழிக்கப்படப்போகிறதா?

அனைத்து சமூக உணர்வுள்ள

தேசப்பற்றுள்ள சக்திகளும் சிந்திப்போம்!

நாம் என்ன செய்யப் போகிறோம்!

-ஆசிரியர்குழு-

"எனது தேசத்தின் நேரம் பிணங்களில் எண்ணப்படுகிறது" -ராஜினி திரணகம-

"புரட்சிக்கு ஏற்படும் இன்னல்களையும், இடர்பாடுகளையும் கண்டு ஆர்ப்பரித்து அகமகிழ்தல், பீதியைப் பரப்புதல், கடந்த காலத்துக்குத் திரும்பி விட வேண்டுமெனப் பிரச்சாரம் செய்தல் - இவையாவும் தான் வர்க்கப் போராட்டத்தில் முதலாளித்துவ அறிவுஜீவிகளின் ஆயுதங்களும் வழிமுறைகளும். இவற்றால் தான் ஏமாற்றப்படுவதற்குப் பாட்டாளி வர்க்கம் அனுமதிக்கப் போவதில்லை"

- லெனின்

www.tamilarangam.net

# 3 வது நிலை பற்றி....

இதழ் ஒன்றில் தலையங்கத்தில் 3வது நிலை பற்றி நாம் .... என்ற பகுதியில் 3வது நிலைக்கான கோரிக்கைகள் சிலவற்றை முன் வைத்திருந்தோம்.அத்துடன் இம் முன்றாவது நிலையானது எமது மண்ணில்உருவாக முடியாதென்பதால் வெளிநாடுகளில் உள்ள நாம் இம் முன்றாவது நிலையினை உருவாக்குவதற்கு ஒன்றிணைவது பற்றிக் கேட்டிருந்தோம்.

எமது மண்ணில் இம் முன்றாவது நிலையானது சாத்தியமற்றதென நாம் குறிப்பிட்டது தவறானதாகும்.எமது மண்ணில் அரசினதும்,அதன் கைக்கூலிகளினதும் L.T.T.E இனதும் அராஜக வன்முறைகளுக்கு மத்தியிலும் பலர் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காகவும்,எமது தேசத்தின் விடுதலைக்காகவும் இரகசியமான முறைகளில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றனர். இவர்களின் செயற்பாடுகளை நாம் கவனத்தில் எடுக்கத் தவறியிருந்தோம்.

தாம் மட்டுமே தமிழ்ழ விடுதலைக்காகப் போராடும் பலமிக்க ஒரே சக்தியென சொல்லிக்கொள்ளும் L.T.T.E.இன் கடந்தகால மாற்று இயக்க அழிப்பு நடவடிக்கைகளும், ஜனநாயகரீதியில் செயற்பட்ட சிறிய இயக்கக் குழுக்களுக்குக் கூடத் தடை செய்து இயங்கவிடாமல் ஒழித்துக் கட்டிய பின்னரும் கூட சிறு குழுக்களாகவும்.தனிநபர்களாகவும் மக்களின் விடுதலைக்காகத் தொடர்ந்தும் போராடி வரும் நல்ல சக்திகள் தேடியழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில் கூட தம்மால் இயன்றவரை எமது போராட்டச் சூழலைவிட்டு அந்நியப்படாமல் போராட்டத்தில் ஈடுபட்டும் தயாரிப்பு வேலைகளைச் செய்துவரும் சக்திகளின் செயற்பாடுகள் மதிப்புக்குரியவை.

இவ்வாறு மக்களின் விடுதலைக்காக செயற்பட்டுவரும் சக்திகளை கடந்தகாலங்களில் மாற்று இயக்கங்களில் இருந்தார்கள் எனும் காரணங்களையும்.பொய்க் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்தும் புலிகள் கைது செய்கின்றனர்.

இத் தோழர்கள் விரும்பியதெல்லாம் இம் மக்களின் உண்மை விடுதலையையே.இவர்கள் சித்திரவதைகளுக்கும்,ரகசிய மரணதண்டனைகளுக்கும் உள்ளாக்கப்படலாம்.

படுகொலைகளும்.சித்திரவதைகளும் தொடர்ச்சியாக நடைபெறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றது எம் மண்ணில்... நாம் என்ன செய்யப்போகின்றோம்?

கேள்விக்குறி எம்முன் நிற்கின்றது. இவையே எம் மூன்றாவது நிலை பற்றிய தேவைக்குரிய காரணிகளாகியது.

இன்று இம் மூன்றாவது நிலையானது எமது மண்ணில் நிகழும் பழிவாங்கல் படுகொலைகளுக்கும், ஜனநாயக மறுப்புகளுக்கும் எதிரான அறைகூவலாகும்.

இம் மூன்றாவது நிலையானது எதனைச் சாதிக்கப்போகின்றது? என்ற கேள்வி உங்கள் முன் எழுவது நியாயமானதே.

எமது மண்ணில் ஜனநாயக மறுப்புகளுக்கும், அராஜகங்களுக்கும் மத்தியில் கைதுகளும், காணாமல் போதலும் என மக்கள் அடக்கப்பட்டு வருவது தொடராக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவற்றைப் பகிரங்கப்படுத்தவோ அல்லது இவற்றுக்கு எதிராகவோ செயற்படக்கூடிய வகையில் ஜனநாயகச் சூழல் இல்லாமையினால் நிகழும் அனர்த்தங்கள் யாவும் மறைக்கப்பட்டுவிடுகிறது. இம் மறைப்புகளையும், ஜனநாயக மறுப்புகளையும் பார்த்தும் மௌனமாகவே இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே எம்மைப் போன்று வெளிநாடுகளில் உள்ள பலருள்ளனர்.

L.T.T.E. இனதும் அரசினதும், அதன் கைக்கூலிகளினதும் செயற்பாடுகள் மக்களினால் காணப்பட்டும், காணப்படாமலும், ஆதரிக்கவேண்டிய நிர்ப்பந்தங்களினால் ஆதரிக்கும் நிலைமைகளும் உள்ளன. இந்நிலைமைகள் யாவும் முறியடிக்கப்படவேண்டியவையே.

3வது நிலையானது குறைந்தபட்சம் கீழ் உள்ள வகைகளில் செயற்படமுடியும்:

1) L.T.T.E. இனாலும், அரச பயங்கரவாதத்தினாலும் எமது மண்ணை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் சிதறியுள்ள முற்போக்குச் சக்திகளை ஒன்றிணைக்கவும், அவர்களைச் சீரழியாது தடுக்கவும்,

2) எமது தேசவிடுதலை சம்பந்தமான முரண்பாடான தேவையான கருத்தியல் தர்க்கங்களை, விவாதங்களை நிகழ்த்துவதன் மூலம் சரியான கருத்துகளை உருவாக்கவும்.

3) எமது மண்ணில் தனிநபர்களாகவும், சிறு குழுக்களாகவும் மக்களின் விடுதலைக்காகப் போராடும் சக்திகளுக்கு ஆதரவளிக்கவும், அவர்களின் ஐக்கியப்பட்ட போராட்டங்களை ஊக்குவிக்கவும்,

4) எமது மண்ணில் மக்கள் விரோத சக்திகளான L.T.T.E.,

www.tamilarangam.net


E.P.R.L.F.,E.N.D.L.F.,P.L.O.T.T, E.L.O.,E.P.D.P.கும்பல்களினது அராஜகங்களுக்கு உள்ளாகும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காக ஒருமித்த குரலில் குரல் கொடுப்பதற்கும்,

மூன்றாவது நிலை அவசியமாகின்றது.

எமது மண்ணில் மக்களின் விடுதலையை விரும்பும் சக்திகளின் போராட்டம்,போராட்ட வழிமுறைகள் ,தந்திரோபாயங்கள் வேலைத்திட்டங்களும் நடைமுறைகளும் என்பவற்றினூடாகவே போராட்டத் தலைமையானது உருவாகி தேசவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.எமது மண்ணில் இதற்கான தொடங்கு புள்ளிகள்,சரியான கருத்தை நோக்கிய நகர்வுகள் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு ஆதரவளிப்போம்!

அராஜகங்களுக்கு எதிராகவும் மக்கள் விரோத சக்திகளுக்கு எதிராகவும் ஒருமித்துக் குரல் கொடுப்போம்!!






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கை இல.6இலிருந்து)

1990 ஜீன் பிரச்சினைகளுக்குப் பிறகு முல்லைத்தீவில் வந்து குவிந்த அகதிகளுக்காக வழமைபோல பல்கலைக்கழக மாணவர்கள் பொதுமக்களிடம் பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கினர் .இந்த நிவாரணப்பொருட்களை LTTE தன்னுடைய பெயரில் மட்டுமே வழங்க வேண்டும் என்று கேட்டது.எரிபொருள்.வாகனப் போக்குவரத்து போன்ற விடயங்கள் LTTE இல் மட்டுமே தங்கியிருக்க வேண்டியிருந்ததால் மாணவர்கள் இதற்கு விருப்பமின்றிச் சம்மதிக்க வேண்டியிருந்தது.இந்தக் காலகட்டத்தில் தங்களால் தலைமை தாங்கி நடத்தப்படுகின்ற இந்தப் போராட்டத்திற்கு எல்லோரும் ஆதரவு தர வேண்டும் என்று LTTE பொது அழைப்பு விட்டது.இது தொடர்பாக நடு நிலையான விமர்சன அறிக்கையொன்றை பல் கலைக்கழக மாணவர் ஒன்றியம் பத்திரிகைகளுக்குக் கொடுத்தது. ROOTE என்ற LTTE கட்டுப்பாட்டிலுள்ள அமைப்பு ஒன்றிலிருந்த சிலர் இந்த அறிக்கை தொடர்பாக மாணவர்களுடன் பேசினர்.இந்தப் பேச்சுக்களின் முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்டது.

ROOTE என்ற LTTE இன் அமைப்பிலுள்ளவர்கள் ப.மா.ஒ.வை அணுகி,ஸ்ரீலங்கா அரசின் இனவெறிப்படுகொலைக்கு எதிராகப் போராடுபவர்களாக சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்டவர்களாக LTTEஐ அறிமுகப்படுத்தி, LTTE இன் பின்னால் எல்லா மக்களும் அணிதிரள வேண்டும் என்று ப.மா.ஒ. தீர்மானம் முன்வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.இதனை ஏற்றுக்கொள்ளாவிட்டால் ப.மா. ஒ. கலைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக ப.மா.ஒ. இல் பலர் இந்தியாவுக்கும்,கொழும்புக்கும் அகதிகளாகத் தப்பிச் சென்றுள்ளனர்.ஒரு பொதுக்கூட்டம் கூட்டி முடிவெடுக்குமாறு மாணவர் தலைவராக இருந்த வின்ஸ்லன் பணிக்கப்பட்டார். வாக்கெடுப்பில் தீர்மானம் 145இற்கு 110ஆகத் தோல்வியடைந்தது.மறுபடி பொதுக் கூட்டத்தைக் கூட்டுமாறு LTTE பணித்தது.இரண்டாம் வாக்கெடுப்பிலும் தீர்மானம் தோல்வியடைந்தது.

இரண்டு நாட்களின் பின் LTTE வின்ஸ்லனிடம் தங்கள் தீர்மானத்தை எழுதிக் கையெழுத்திட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுத் தரும்படி வற்புறுத்திற்று. வின்ஸ்ஸன் தீர்மானத்தை எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டு ப.மா.ஒ.இலிருந்து விலகிக்கொண்டார். அவருடன் ஏனைய மாணவர்களும் விலகிக்கொண்டனர்.

குறிப்பு: ஒருகாலத்தில் LTTE க்கு ஆதரவாக வின்ஸ்ஸன் வேலை செய்தவர்.

---

## நான் தண்டனை கோருகிறேன்

— பாப்லோ நெருடா

நான்
அழுவதற்கு வரவில்லை - அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னும்
உயிரோடு இருப்பவர்களே!
உங்களிடம் பேசத்தான்...
உங்களை நோக்கியும்
என்னை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்...
இறந்து கிடக்கும்
நம்மவர்கள் பேராலே
கேட்கிறேன்...
தண்டனை அளியுங்கள்!

நமது
தந்தையர் நாட்டு மண் மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்!

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

இந்த சவங்களின் மீது
சிம்மாசனம் ஏறிய
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை கொடுங்கள்!

நான்
எல்லோருடனும்
கை குலுக்க விரும்பவில்லை
ரத்தக் கறை படிந்த
கரங்களைத்
தொடுவதற்கே விரும்பவில்லை
நான்
தண்டனை கோருகின்றேன்...!

தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதுவராய் அனுப்புவதை
அமைதி வரும் வரை
அவர்களை
அறைகளில் அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை.

இங்கேயே...
இப்பொழுதே...
திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்!
அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண் முன்னே
நிறைவேற்றுங்கள்...!

www.tamilarangam.net

# ராஜீவின் கொலை

இலங்கையில் தீர்வு காண முடியாத பிரச்சினையாகத் தொடரும் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையை அதிகாரத்திலுள்ள பாசிச U.N.P. பேரினவாத அரசு தமது ஆட்சியினைத் தொடர முழு மக்களையுமே மரணத்தின் விளிம்புக்குத் தள்ளியுள்ளது. இன்று தென் கிழக்காசிய நாடுகளின் நிலையும் இதுதான்.

தென்கிழக்காசியாவின் பேட்டை ரௌடியாக செயற்படும் இந்திய மேலாதிக்க அரசு தனது நாட்டில் சிறுபான்மைத் தேசிய இனங்களை ஒடுக்குவது மட்டுமின்றி தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டத்திலும் தனது நேரடித் தலையீட்டினை மேற்கொண்டு தமிழ்த் தேசிய விடுதலை அமைப்புகளை பாசிசப் போக்குடைய ரௌடிக் கும்பல்களாக்கி தமிழ்த் தேசிய இனத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

இந்திய அரசு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பிராந்திய வல்லரசாக மாறுவதற்கு தனது ஆதிக்க வெளிப்பாடாக பாகிஸ்தானுடன் யுத்தம் நடாத்தியதும், சீனாவுடன் யுத்தம் நடாத்தி படுதோல்வியடைந்ததும், பங்களா தேசத்தைச் சுடுகாடாக்கியதும், நேபாளம் மீது பொருளாதாரத் தடையை மேற்கொண்டதும், உள் நாட்டிலேயே தெலுங்கானா விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்ததாகக் குற்றம் சாட்டி விவசாயிகளைக் கொன்றுகுவித்ததும் என்று ஏராளமான உதாரணங்கள் உள்ளன.

சீக்கிய தேசிய இனப்பிரச்சினையில் மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான ஒடுக்குமுறையால் அன்றைய பிரதமர் இந்திரா காந்தியை அவரின் மெய்க்காவலரான சீக்கியர் ஒருவரே சுட்டுக்கொலை செய்தார்.

இதன்பின் பதவிக்கு வந்த நேரு பரம்பரையின் வாரிசான பரிசுத்த ராஜீவ் காந்தியும் அதிகார வெறியுடன் தனக்கு எதிரானவர்களைத் தீர்த்துக்கட்டுவதிலே குறியாக இருந்தார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் தலையிட்ட ராஜீவ் "அமைதிப்"படையினை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி தமிழ்த் தேசிய இனத்தையே கடித்துக் குதறியது ஈழமக்களின் மனதில் இன்றும் வடுவாக உள்ளது.

இந்திய "அமைதிப்"படையினர் இழைத்த கொடுரங்களுக்குப் பழி வாங்கலாகவே உடலைக் கூட்டி

www.tamilarangam.net

அள்ளவே முடியாத அளவுக்கு வெடி குண்டால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் ராஜீவ். இது இந்திய ஆளும் காங் கிரசுக்கு ஒரு பாடமாக அமையட் டும்.

இது ஒருபுறமிருக்க, இந்தப் பழிவாங்கலைச் செய்து முடித்த வர்கள் தமிழ் மக்களின் சுதந்திரத் திற்கு சவாலாக இருக்கும் ஏதோ ஒரு சக்தியால்(?) வழிநடத்தப்ப டும் L.T.T.E. இனர்தான்.

தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டத்தில் எமது இனத்தைச் சேர்ந்த இந்திய மக்களின் ஆதரவும் இயல்பானதே. இந்த ஆதரவை எந்தவகையில் பெறுவ தென்பதே எம்மிடமுள்ள பிரச்சி னையாகும்.

கடந்தகாலத்தில் "விடுதலை அமைப்பு" என்ற பெயரில் செயல் பட்ட அனைத்துக் கும்பல்களினதும் தலைமைகள் அ.தி.மு.க.வையும், தி.மு.க. வையும், தி.க.வையும், காங்கிரஸையும் மற்றைய ஒட்டுப் பொறுக்கும் கும்பல்களையுமே நம்பியிருந்தன.

உண்மையில் எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்குக் கை கொடுப்பவர்கள் இந்தியாவில் தேசிய சுய நிர்ணய உரிமைக்குப் போராடுபவர்களும், ஒடுக்கப்பட்ட மக்களின் ஜனநாயகத்திற்காகப் போராடுபவர்களும், நக்ஸலைட்டு களும், முற்போக்கு அமைப்புக ளுமே. இவர்களுடன் உறவினை வளர்த்து, தென்கிழக்காசிய விடுத லையை நோக்கி நகர்வதே தமி ழ்த் தேசிய விடுதலை அமைப்புக ளின் நோக்கமாக இருக்க வேண் டும்.

ராஜீவ் மீது தமது கொலைக் கரங்களை நீட்டிய கொலையாளி கள் அம்பலப்பட்டதும், நட்டாற்று அகதிகளாக அல்லலுறும் ஈழத்தமி ழரை இந்தியப் பொலிஸார் துன் புறுத்துவதும், முற்போக்குவாதிகள், ஜனநாயகம் பற்றிப் பேசுபவர்கள் கைது செய்யப்படுவதும், ஏனைய பாசிசத் தலைமைகள் தம்மைப் பாதுகாக்க வலைப் பின்னலாக பாதுகாப்புப்படைகளுடன் பவனி வருவதும், அப்பாவி மக்களை சோதனை என்ற பெயரில் துன்புறு த்துவதும் ஈழத்தமிழரை சர்வதேச குண்டுவெடிப்பு வீரர்கள் என்ற நிலைக்குக் கொண்டுவரத் தான்.

www.tamilarangam.net

# பெண்

எங்கு எமது தேசத்தின் அரசுக்கெதிரான போராட்டமானது ஆயுதம் தாங்கிய வன்முறைப் போராட்டமாக மாற்றமடைந்த காலத்திலிருந்தே பெண்களின் சுதந்திரம் தொடர்பாகவும் பெண்விடுதலை தொடர்பாகவும் பல்வேறுபட்ட கருத்துகள் குறிப்பான ஒரே நோக்கு நிலைமையிலிருந்து பலராலும் பல அமைப்புக்களாலும் பெண்விடுதலை தொடர்பாக LTTE தலைவர் வே. பிரபாகரன் கூட அறிக்கைகள் விடுகின்ற அளவிற்கு இது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அய்ரோப்பாவில் இருந்து வெளிவருகின்ற பல சஞ்சிகைகள் பெண்விடுதலை தொடர்பாக மிகவும் அக்கறையுடனும் ஆணித்தரமாகவும் கருத்துக்களை முன்வைக்கின்றன. ஆங்காங்கே கவிதை அரங்குகளும் கலை நிகழ்ச்சிகளும் பெண் சுதந்திரம் பேணுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது தேசத்தின் பெண்கள் இராணுவ சீருடை அணிந்து போராட்டக் களத்தினுள் குதித்துவிட்டனர். பல இராணுவ முகாம்கள் பெண்களினால் தனித்து தகர்க்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கும் பல இளம் பெண்கள் LTTE இல் இணைந்து கொண்டிருக்கின்றார்கள். நமது சமூகத்தின் கலாச்சார வரம்புகளைத் தகர்த்தெறிந்து விட்டு பெண்ணினம் போராட்டக் களத்தினுள் குதித்திருக்கிறது. எனினும் பெண்விடுதலை தொடர்பாகவும் தேச விடுதலையில் பெண்களின் பங்கு குறித்தும் இன்றைக்கு வரைக்கும் எமது தேசத்தின் விடுதலை தொடர்பாக கருத்துக்களை முன் வைக்கின்ற எந்த சக்திகள் மத்தியிலிருந்தும் சரியான தத்துவார்த்த நோக்குடன் கருத்துகள் முன்வைக்கப்படாமை துரதிஷ்டமானதே. எவ்வாறு கோஷங்களை மட்டுமே வைத்துக் கொண்டு, அந்தக் கோஷங்களை மந்திரம் போல உச்சரிக்கின்ற பலர், பெண்விடுதலையில் தாங்கள் நிறைய சாதித்தது விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் பெண்விடுதலையில் அக்கறையுள்ள சமூக உணர்வுள்ள சக்திகள் மத்தியில் ஒரு விவாதத்தை தோற்றுவிக்குமென நம்புகிறோம்.

ஆதிப் பொதுவுடமை சமூகம் என்று சொல்லப்படுகின்ற, காட்டுமிராண்டி மனிதர்கள் வாழ்ந்த காலத்தில், பெண்களின் உழைப்புக்கு தகுந்த மதிப்பளிக்கப்பட்டிருந்தது. பெண்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டிருந்தது. ஒரு பெண்ணின் பெயரிலேயே, அவள் தலைமையிலேயே குழுக்களாக வாழ்ந்த முன்னேற்றமடையாத அந்த மனிதகுலம் தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டது. அப்பொழுது பெண் ஒரு இறைச்சிப் பண்டமாகவோ அல்லது குழந்தை உற்பத்தி செய்யும் இயந்திரமாகவோ மதிக்கப்படவில்லை. ஒரு மனித ஜீவனாக மதிக்கப்பட்டாள். அவள் தலைமைக்கும் உழைப்பிற்கும் அந்த சமூகத்தில் அங்கீகாரமும் மதிப்பும் வழங்கப்பட்டிருந்தது. இந்தச் சமூகத்தில் குடும்பம் அலகுகளாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரிக்கப்படவில்லை. ஒரு பெண் தான் விரும்பிய ஆணுடன் உறவு வைத்துகொண்டாள். எனவே வாரிசுகள் ஆணின் பெயரால் அழைக்கப்படவில்லை. தலைமைப் பெண்ணின் வழியிலேயே அழைக்கப்பட்டது. இதன் பிறகு வளர்ச்சியடைகின்ற மனித குலம் வேலைகளை இலகுவாக்கிக் கொள்கிறது. விவசாயம், மிருகவளர்ப்பு என்று மனிதகுலம் தனக்குரிய சொத்துக்களை சேகரித்துக் கொள்ள ஆரம்பிக்கிறது. வேலைப்பிரிவினைகள் உருவாகின்றன. ஆள்பவன், ஆளப்படுகின்றவன் என்ற நிலை உருவாகிறது. இந்த நேரத்தில் மனிதனுக்கு சொத்தும் அதற்கு வாரிசும் தேவைப்படுகிறது. அதனோடு கூடவே முதலில் பெண் அடக்குமுறை உருவாகிறது.பொருளாதார ரீதியான அவள் மீதான அடக்கு முறையானது, சமூக கலாச்சார அரசியல் ரீதியில் வலுவாக்கப்பட்டு, விரிவாக்கப்படுகிறது. இவையெல்லாம் மனித குலத்தின் விஞ்ஞான வரலாறு எமக்குத் தந்த உண்மைகள்.

இந்த அடக்குமுறையானது மனித குலம் சந்தித்த ஒவ்வொரு சமூக அமைப்பிற்கும் ஏற்ப வடிவங்களில் மாறுபடுகிறது. அந்தந்தச் சமூக கட்டுமானங்களுக்கு ஏற்ப பொருளாதார கலாச்சார, அரசியல் ரீதியான சமூக ஒடுக்குமுறைகளாக வடிவெடுத்தன. இவ்வொடுக்கு முறைகள் பெருமளவு நிலத்தை சொந்தமாக வைத்திருக்கின்ற நிலப்பிரபுக்கள் என்ற சமூக சக்திகள் ஆதிக்கத்திலிருந்த நிலப்பிரபுத்துவ காலம்வரை பெண்விடுதலை பெண் சுதந்திரம் பெண்ணிலைவாதம் தொடர்பான கோஷங்களைப் பெருமளவு முன் நிறுத்தப்படவில்லை. பெண்கள் கொடூரமான பொருளாதார கலாச்சார அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஆனால் நிலப்பிரபுத்துவபொருளதார அமைப்பு முறை மக்களின் சமூகப் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல்போன போது பெருமளவு மூலதனத்தை சொந்தமாக வைத்திருக்கின்ற முதலாளிகள் என்ற சமூக சக்திகள் ஆதிக்கத்திலுள்ள சமூக சக்திகளாக முதலாளித்துவ சமூகம் உதயமானபோது பெண்விடுதலை என்ற கோஷம் முன்னெழுந்தது. நிலத்தோடு பிணைக்கப்பட்டு, நிலப்பிரபுத்துவ கலாச்சார சங்கிலியால் கட்டப்பட்டு வீட்டுக்குள் முடக்கி வைக்கப்ட்டிருந்த பெண் இனத்திற்கு விலங்குகளை உடைக்க வெளியுலகம் அறிமுகப்படுத்தப்பட்டது. சட்டரீதியாகப் பெண் இனத்திற்கு பல முற்போக்கான உரிமைகள் வழங்கப்பட்டன. மறுமணம் செய்யும் உரிமை, விவாகரத்து உரிமைகள் போன்ற பல முற்போக்கான உரிமைகள் வழங்கப்பட்டன. பெருமளவு பொருளாதார சுதந்திரம் வழங்கப்பட்டது. ஆரம்பக்கல்வியை அறியாத பெண்ணினம் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றது. அரச உயர்பதவிகளிலும் நிர்வாகத்திலும் பெண்கள் புகுந்து கொண்டனர். முதலாளித்துவம் கொடுத்த இந்த முற்போக்கான மாற்றத்தினால்

www.tamilarangam.net

பெண்ணினம் விடுதலை பெற்றுவிட்டது என்கிறார்கள் பலர். இந்த மாற்றத்தில் இருக்கின்ற முற்போக்கு தன்மையை யாரும் மறுக்கமுடியாது. இன்றைக்கு நிலப்பிரபுத்துவ அடிமை அறுக்கப்பட்ட பல முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடுகள் பலவற்றில் பெண்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சுதந்திரத்தைப் பலர் கோடிட்டுக் காட்டுகின்றனர். இதற்கு மேல் பெண்விடுதலை என்றால் என்ன என்று கேட்கின்றார்கள்.

நிலப்பிரபுத்துவமும், நிலப்பிரபுத்துவ கலாச்சார சித்தாந்தமும் ஒழிக்கப்பட்டு முதலாளித்துவம் என்ற புதிய ஒழுங்குபடுத்தப்பட்ட ஸ்தாபனம் உருவானது. இந்த ஸ்தாபனம் தனக்கே உரித்தான ஒழுங்குகளை ஏற்றுக் கொண்டது. இந்த ஒழுங்கு முறையிலேயேபெண்ணின் விடுதலையும் உட்படுத்தப்பட்டது. முதலாளித்துவம் என்ற பலம் வாய்ந்த ஸ்தாபனத்தின் கீழ் அதனது சித்தாந்தங்களுக்கு உட்பட்டே பெண்ணும் தன்னை ஒழுங்குபடுத்திக் கொண்டன. முதலாளித்துவத்தின் வசதிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப முழு மனிதகுலமும் அந்த அமைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்டது. நிலத்தோடு பிணைக்கப்பட்டு வெளியுலகத்தை அறிய முடியாது மனித குலத்திற்கு உழைப்பின் தேவையும் மனித சக்தியின் தேவையும் அதிகரித்தது. பெருகி வந்த தொழிற்சாலைகளிலும் தொழில் நிலையங்களிலும் வேலை செய்வதற்கு அதிகளவு தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள். இந்நேரத்தில் மனித குலத்தின் அரைவாசிப் பகுதியான பெண்களின் உழைப்புத் தேவை அதிகரித்தது. முதலாளித்துவ அமைப்பிற்கான இந்தத் தவிர்க்கமுடியாத தேவையானது, பெண்ணினத்தை அதன் கலாச்சார சங்கிலியிலிருந்து விடுவிக்க நிர்ப்பந்தித்தது. பெண்ணினத்தை வெளியில் கொண்டுவர அரசியலிலும் புதிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. பெண்களுக்காகப் புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. அதன் விளைவாக முதலாளித்துவம் தான் எதிர்பார்த்த வெற்றியை பெற்றுக் கொண்டது. ஆனால் பெண்ணினம் மட்டும் பெரிய தோல்வியை சம்பாதித்துக் கொண்டது. பெண்கள் மீதான அடக்குமுறை புதிய வடிவம் பெற்றது. முதலாளித்துவம் கொடுத்த முற்போக்கான மாற்றத்தைத் தொடர்ந்து பேணமுடியாமல் போனது. நிலப்பிரபுத்துவக் காலத்தில் இந்தக் குடும்பம் என்ற அமைப்பற்ற அடக்குமுறைக்குள் அதனைத் தொடர்ந்து பேணுவதற்காக அமைக்கப்பட்ட அன்பு, பாசம் என்ற தற்காலிக ஆறுதலைக் கூட அது இழந்து போனது.


நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில் பெண் என்பவள் குறைந்தபட்சம் மனிதப் பெண்ணாக பல சந்தர்ப்பங்களில் மதிக்கப்பட்டாள். ஆனால் முதலாளித்துவ வளர்ச்சியடைந்த அமைப்புக்குள்ளோ அவள் வெறுமனே ஒரு இறைச்சிப் பண்டமாகவே பார்க்கப்படுகிறாள். உடலுறவுக்கான பெரும்பாலும் அதற்காக மட்டுமான காட்சிப் பொருளாக அமைக்கப் பட்டிருக்கிறாள். பெண்கள் போட்டிருந்த நிலப்பிரபுத்துவக் கனமான கலாச்சார சட்டை முற்றாகக் கிழித்தெறியப்பட்டு நிர்வாணமாக

www.tamilarangam.net



நன்றி: மனிதம்

www.tamilarangam.net



நன்றி : தூண்டில்

www.tamilarangam.net

நடுத்தெருவில் நிறுத்தப்பட்டிருக்கிறாள். பல சந்தர்ப்பங்களில் அவளே உணர்ந்து கொள்ளாமல் மிகவும் நாகரீகமாக அடக்கப்படுகிறாள். ஒரு இயந்திரமாக இயக்கப்படுகிறாள். முதலாளித்துவம் பெண்ணினத்திற்கு வழங்கிய இந்த முற்போக்கான மாற்றம் ஏன் தொடர்ந்து பேணப்படவில்லையா? கலாச்சாரம் என்பது வளர்த்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக சீரழிக்கப்பட்டது ஏன்? ஆழமான இந்தக் கேள்விகளுக்கான பதில் என்பது பெண்விடுதலை தொடர்பான ஒரு சரியான தெளிவிற்கு வர வழிகாட்டும் என நம்பலாம்.

முதலாளித்துவம் என்ற ஸ்தாபனம் உருவான போது, அந்த ஸ்தாபனத்தின் சமூகத்தேவைக்காக பெண்ணும் அதிலொரு அங்கமாக ஸ்தாபனப்படுத்தப்பட்டாள். பெண்களுக்கென்று பெண் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டுக் கொள்வதற்கான சரியான ஸ்தாபனம் ஒன்று இருக்கவில்லை. (முதலாவதாக மொத்த மனிதகுலத்திற்குமான பூரண விடுதலை தரப்படவில்லை. அல்லது பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பது வெளிப்படையானது. இங்கு குறிப்பிடுவது அவ்வாறான பூரணப்படுத்தப்பட மனிதகுல விடுதலையிலும் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் இருந்தன என்பதைத்தான். அதாவது பெண்விடுதலை பற்றிப் பேசிய அந்த சமூகத்தில் ஒரு ஆண் எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்கும் மேலதிகமாகப் பெண் சமூகத்தால் ஒதுக்கப்படுகிறாள். என்பது பற்றியே குறிப்பிடுகிறோம்)

இங்கு பெண்விடுதலைபற்றியும் பேசியது பெண்விடுதலைக்கான ஸ்தாபனம் ஒன்றல்ல. முதலாளித்துவத்தின் ஆதிக்கநிலையிலிருந்த முதலாளிகளும் அதன் சித்தாந்த கர்த்தாக்களும்தான். சரியான சமூகக் கண்காணிப்புடன் கூடிய பெண்விடுதலை ஸ்தாபனம் ஒன்று உருவாகி இருக்கவில்லை. இது முதலாளித்துவ சமூக அமைப்பில் சாத்தியமற்ற ஒன்றும்கூட. எவ்வாறு முதலாளித்துவத்திற்கு ஒரு கட்டம் வரையான பெண் சுதந்திரம் தவிர்க்கமுடியாமல் இருந்ததோ, வரலாற்றுத் தேவையாக உருவானதோ அப்படியேதான் முதலாளித்துவ அமைப்பினுள் பெண் பூரண சுதந்திரத்தை பெற்றுக் கொள்ள முடியாது. என்பது தவிர்க்கமுடியாததது. இந்த சரியான பெண்விடுதலையானது, முதலாளித்துவத்திற்கு அடுத்த முதலாளித்துவ பொருளாதார சமூக அமைப்பு நிலைக்கமுடியாமல் போகும் போது உருவாகும் சமூக அமைப்பிலேயே சாதிக்கப்பட முடியும். பெண்ணின் விடுதலையும் மொத்த சமூகத்தின் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த வேறுபடுத்த முடியாததெனினும், மொத்த சமூகத்தின் பூரணவிடுதலை என்பதில் பெண்விடுதலை என்பதும் மிகவும் தவிர்க்கமுடியாத விலக்கப்படமுடியாத ஒரு அங்கமாகும். எனவே சமூக அமைப்பை மாற்றி முழுமக்களுக்குமான பூரணவிடுதலையை விரும்புகின்ற சமூக உணர்வுள்ள யாரும் பெண்விடுதலையை ஒதுக்கிவிட முடியாது.

முதலாளித்துவம் எமக்கு கற்றுத் தந்த பாடத்திலிருந்து இந்தப் பெண்


www.tamilarangam.net

விடுதலை எப்படி சாதிக்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வருதல் மிகவும் அவசியமானதாகும். முதலாளித்துவம் உருவான காலகட்டத்தினைப் போல வெறுமனே பெண்ணின் சுதந்திரத்திற்கான கோஷங்களை மட்டுமே முன்வைத்து எமது தேசியப் போராட்டத்தின் தேவைக்காக பெண்ணினத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான நிலையை உருவாக்குதல் மட்டும் பெண்விடுதலை ஆகிவிட முடியாது. பெண்களுக்கென்று பெண்களின் தலைமையிலேயே கலாச்சாரப் போராட்டம் ஒன்றை தலைமைதாங்கி நடத்துகின்ற வலுவுள்ள பலமான பெண்விடுதலை ஸ்தாபனம் ஒன்று அரசியல் ஸ்தாபனம் ஒன்றில் நேரடியான அரசியல் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு குறிப்பிடுவது அரசியலற்ற ஒரு சீர்திருத்தவாத பெண்விடுதலை ஸ்தாபனம் ஒன்றை நோக்காகக் கொண்டில்லை. பெண்களுக்கான பெண்களின் ஸ்தாபனத்திற்கான அரசியல் தலைமையை எவ்வாறு ஒரு அரசியல் ஸ்தாபனம் கொள்கை வழியில் வழங்கலாம் என்பதை அந்த அரசியல் ஸ்தாபனமே தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இந்த திட்டமிட்ட பெண்விடுதலைக்கான போராட்டம் என்பது தனது நோக்கத்திற்கும் குறிக்கோளுக்கும் ஒப்ப பெண் சுதந்திரத்தினை தனது அரசியல் தேவைக்காக வலியுறுத்துகின்ற அரசியல் ஸ்தாபனத்தின் தலைமையை ஏற்றுக்கொள்ளும். இன்றைக்கு பெண்விடுதலை தொடர்பாக கோஷம் எழுப்புகின்ற பிரதானமாக இரண்டு தவறான நோக்குகளில் முதலாவதாக ஓர் அரசியல் ஸ்தாபனத்தின் ஒரு பகுதியாகப் பெண்கள் அணிதிரட்டப்படலாம் என்பதும் அரசியல் ஸ்தாபனத்தின் தேவையை முக்கியத்துவப் படுத்தாத வெறுமனே சீர்திருத்தவாதப் போக்கில் பெண்கள் அணிதிரட்டப்படலாம் என்ற நோக்கும் காணப்படுகிறது. இவ்விரண்டுமே அடிப்படையில் சந்தர்ப்பவாத நோக்கில் அமைந்தனவாகவே இறுதியல் முடியும்.

எமது தேசத்தின விடுதலைக்கான போராட்டம் வன்முறைப் போராட்டம் என்று வடிவெடுத்த காலம் முதலே இதற்கான வெளிப்பாடுகளைக் காண முடியும்.

எமது தேசத்தில் ஆரம்பம் முதலே EPRLF, EROS, PLOT போன்ற சிறு முதலாளித்துவ அமைப்புக்கள் சமூக மாற்றம் பற்றியும் பெண்விடுதலை பற்றியும் பேசிக்கொண்டன. ஏராளமான பெண் போராளிகள் ஆயுதம் தாங்கிப் போராடினார்கள். காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலில் EPRLF பெண்போராளி சோபா வீர மரணமடைந்தாள். தனியான பெண்கள் பிரிவொன்றை EPRLF தனக்கென ஏற்படுத்திக் கொண்டது. இதுவரை ஈழப் போராட்டத்தின் ஆரம்ப முதலே பல பெண்களின் வீர இரத்தம் எமது மண்ணில் சிந்தப்பட்டிருக்கிறது. ஆனால் எமது தேச விடுதலை இயக்கங்களின் உள்ளும் புறமும் பெண்களுக்கு எதிரான பாலியல் வதைகள் அதே இயக்கங்களினால்

www.tamilarangam.net



மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். பலதடவைகள் நேரில் பார்த்திருக்கிறோம். காக்கைதீவிலும் கூவம் நதியிலும் சடலங்களைப் பார்த்திருக்கிறோம். மணியந் தோட்டத்தில் அநாதைப் பிணங்களாக ஆறு பெண்களின் சடலங்களைப் பார்த்திருக்கிறோம். இயக்க உள் முரண்பாடுகள் காரணமாக வெளியேறிய பல பெண்கள் இன்றைக்கும் சமூகத்தில் இரண்டாந்தரப் பிரசையர்க திசையற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். EPRLF தீவிரமாக பெண்விடுதலை பேசிய காலகட்டத்தில், TELO இல் இருந்து வெளியேறிய 20க்கும் மேற்பட்ட பெண்கள் தமது சமூக ஒடுக்குமுறைகளுக்குப் பயந்து தமிழ் நாட்டிலிருந்த காலகட்டத்தில் EPRLFஇன் ஈழப்பெண்கள் முன்னணி சாதாரண பெண் என்ற அபிமானத்துடன் கூட அவர்களைப் பார்க்க மறுத்தது. TELO உடன் எமக்கு அய்க்கியம் இருப்பதால் உங்களைக் கருத்தில் எடுக்கமுடியாது என்று ஆணித்தரமாக மறுத்துவிட்டனர். அது தொடர்பாக ஈழ பெண்விடுதலை முன்னணியில் இருந்த ஒரு பெண் கருத்துத் தெரிவிக்கையில் பெண்கள் என்றவகையில் எனக்குப் பெண்ணின் கஷ்டங்கள் விளங்கும் ஆனால் எனது ஸ்தாபனத்தின் அரசியலுக்கு நான் கட்டுப்பட்டவள் என்று சொன்னார். ஒரு ஸ்தாபனத்தின் அரசியல் தேவைக்காக எவ்வளவு தூரம் பெண்ணினம் நயவஞ்சகத்தனமாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது என்பது இது போன்ற பல சந்தர்ப்பங்களில் தெளிவாகி இருக்கிறது. எனவே பெண்களுக்கான பெண்விடுதலை ஸ்தாபனம் ஒன்று நேரடியான இயக்க அரசியல் கட்டுப்பாடுகளுக்கு அப்பால் ஒரு அரசியல் இயக்கத்தின் கொள்கை வழிநடத்தலைத் தானே விரும்பி ஏற்றுக் கொள்கின்ற அல்லது கொள்கை வழியிலான தலைமையை ஒரு அரசியல் ஸ்தாபனம் வழங்கக் கூடிய அமைப்பு முறையைக் கொண்டதாக எமது தேசத்தில் உருவாகும் முற்போக்கான அமைப்பு ஒன்றோடு இணைந்து உருவாக வேண்டும் என்ற தேவையை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

இந்த நிலையில் இன்றைக்கு LTTE என்ற சமூகப் பாசிச தனிநபர் ஆயுதக் குழுவினால் தனது தேவைக்காக மட்டுமே முன்வைக்கப்படுகின்ற பெண்விடுதலைக் கோஷத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சண்முகம் சிவலிங்கத்தின் மீண்டும் எழுந்திருக்கையில்
என்ற கவிதையில் வரும் சில வரிகள்.

எனது மயிர் பொசுங்கி விட்டது
எனது தோல் கருகிவிட்டது
எனது காதுச்சோணைகள் எரிந்துவிட்டன
இந்த ரணங்களோடுதான்
மீண்டும் எழுந்திருக்கிறேன்

இந்த ஊனங்களின்
தழும்புகளுடன்தான் நான் இனி வாழவேண்டும்
எனது மனவெளியோ
வெந்த வனம்போல் உள்ளது.
தீப்பிடித்துக் கருகிய புற்கற்றைகள்
இங்கொன்று அங்கொன்றாய் தெரிகிறது
இடையே சாம்பல் கலந்தமண்
அடி கருகிய புற்கற்றைகளிலிருந்து
இரண்டொரு பசும் முளைகள்
சின்னச் சின்ன பச்சைப் படர்கள்
தெரிகிறதா ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆடு நனையுதென்று....

சிறீலங்கா இனவாத அரசு தமிழ்த் தேசிய இனத்தின் மீது தனது இறுகிய கொலைக்கரங்களை நீட்டியது மட்டுமன்றி சிங்கள மக்களைக் கொன்று குவித்ததையும் 19.02.1991இல் கொழும்பில் கூடிய அன்னையர் முன்னணியினர் அம்பலப்படுத்தினர். இது ஒரு புறமிருக்க,

தென்கிழக்காசியப் பகுதியிலேயே ஆரோக்கியமான வெடிகுண்டு அரசியல் நடாத்தும் பாசிச விடுதலைப் புலிகள் 1991 மாசி-பங்குனி "விடுதலைப் புலிகள்" பத்திரிகையில் கொழும்பில் நடைபெற்ற அன்னையர் முன்னணியினரின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுப்பது என்று வெளியிட்ட செய்தி எவ்வளவு அப்பட்டமானது!

சொந்த மண்ணிலேயே நூற்றுக்கணக்கான அப்பாவி இளைஞர்களைக் கொன்றவர்கள் இவர்கள். இது மட்டுமா! எத்தனை பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ,ஜனநாயகம் வேண்டி நின்ற முற்போக்குவாதிகள், கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் என்று எத்தனை பேரைக் கொன்றார்கள். பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்.

பிறந்து வளர்ந்த மண்ணை விட்டே குறிப்பிட்ட நேரத்தில் முஸ்லிம் மக்களை விரட்டியதை மறக்க முடியுமா?

தாங்களால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் அன்னையரின் கண்ணீர் கோரிக்கை இவர்களின் கண்ணுக்குத் தெரியவில்லையா?

சிங்கள மக்கள் மேலான கொக்கிளாய், நாயாற்று படுகொலை, 15 மே 1985இல் அநுராதபுரத்தில் குழந்தையிலிருந்து முதியோர்வரை 150க்கு மேற்பட்டோரை கொன்ற புலிகள் -

1987 ஆவணியில் திருகோணமலை பகுதியில் அப்பாவிச் சிங்கள மக்களை கொன்ற புலிகள் -

காத்தான்குடி பள்ளிவாசலில் முஸ்லீம்களைப் படுகொலை செய்த புலிகள் -

எத்தனையோ சிங்களக் கிராமங்களில் புகுந்து மக்களை இரவோடிரவாக சுட்டும், வெட்டியும் கொன்ற புலிகள் -

அன்னையர் முன்னணியின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுப்பது என்பது அவர்களின் ஏமாற்றுவித்தையின் பிறிதொரு பாணியே!

இவர்களிடம் யார் கேட்டது நியாயம்? தங்களின் இருப்பை நிலைநிறுத்த நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள் புலிகள்!

www.tamilarangam.net

## ஸ்டாலினும் ரசிய புரட்சியும்

''ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்'' என்ற இந்நூல் ரசிய புரட்சி பற்றியும் அதில் ஸ்டாலின் பங்கு பற்றியும் மறு மதிப்பீடு செய்வதற்கான தூண்டுகோலாக உள்ளது. இக் கண்ணோட்டத்திலிருந்து இந்தக் குறிப்புரைகளைப் பயனுள்ள வகையில் படிக்கலாம். ஆனால், இக்குறிப்புரைகளை ஒரு வரலாற்று ரீதியான ஆய்வு என்ற முறையிலோ அல்லது ஸ்டாலினுடைய வரலாற்று ரீதியான பாத்திரத்தைப் பற்றிய விமர்சன ரீதியான மதிப்பீடு என்ற முறையிலோ மாவோ எழுத வில்லை. மாவோவின் உண்மையான நோக்கம் ரசிய அனுபவங் களின் பல்வேறு அம்சங்களை ஆய்வுசெய்வதன் வாயிலாகப் பெறப்படும் படிப்பினைகளினூடே சீனப்புரட்சி எதிர் கொண்டுள்ள பிரச்சனைகளை ஆய்வு செய்வதேயாகும்.

இக் குறிப்புரைகள் கலாச்சாரப் புரட்சியின்போது உட்கட்சி விவாதத்திற்காக சீனாவில் சுற்றுக்கு விடப்பட்டது. எனினும் அவை அதிகாரப் பூர்வமாக வெளியிடப்படவில்லை. இந்நூலின் சீன முன்னுரையில், இவை முழுஅளவில் சரியானதாகவும், முழுமை யானதாகவும் இல்லாதிருக்கலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவை ஒட்டுமொத்தத்தில் பார்க்கும்போது மிகவும் சரியானதாக இருப்பதோடு ஸ்டாலினை பற்றியும் ரசிய அனுபவங்களைப் பற்றியும் குறிப்பிடத்தக்க, மதிப்பு மிக்க, விரிவான பகுப்பாய்வை அளிப்பவையாகவும் இருக்கின்றன. இது போன்ற ஒன்று சீனாவில் பகிரங்கமாக எப்போதுமே கிடைத்ததில்லை.

ஸ்டாலின் மீது குருச்சேவ் தாக்குதல் தொடுத்த காலம் முதற் கொண்டு அதிகாரப்பூர்வமாக சீனர்கள் பெரும்பாலும் ஸ்டாலினை உயர்த்திப் பிடித்து வந்துள்ளனர். ''1956-ல் ஸ்டாலின் விமர்சனம் செய்யப்பட்டபோது ஒரு புறம் நாங்கள் மகிழ்ச்சியுற்றோம், ஆனால் மறுபுறம் நாங்கள் ஐயுற்று அஞ்சினோம்'' என்றும் ''சிந்தனையின் தளைகளை அகற்றவும், அடக்கப்பட்ட உணர்வுகளை விடுவிக்கவும், கண்மூடித்தனமான நம்பிக்கையைத் தகர்க்கவும் மூடியைத் திறந்து விடுவது அவசியமானதாக இருந்தது. ஆனால் அவரை ஒரேயடியாகத் தகர்த்துத் தரைமட்டமாக்குவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது''[33] என்றும் மாவோ கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகின் பார்வைக்கு, ஸ்டாலின் மாபெரும் மார்க்சிய-லெனினியவாதியாகவும், லெனினிய லட்சியங்களுக்கு வாரிசாகவும் சோசலிசத் தொழில் மயமாக்கல் மற்றும் விவசாயக் கூட்டு உடமையாக்கலை அடையவும் பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றி ஈட்டவும் ரசிய மக்களை வழி நடத்தியவராகவும் காட்சியளிக்கிறார். ஆனால் அவர் கடுமையான தவறுகளை இழைத்தார் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. கடந்த இருபது ஆண்டுகளாக அந்தத் தவறுகள் கீழ்க்கண்டனவென்று கூறப்படுகிறது. சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தின் விதிகளைப் புரிந்து கொள்வதில் மார்க்சிய—லெனினிய இயக்க இயலை விட்டு வழுவிச் சென்றது, விவசாயத்தில் கூட்டுடைமை மயமாக்கலுக்குப் பிறகும் சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்குமிடையே பகைமையான வர்க்கப் போராட்டமும் முரண் பாடுகளும் நீடிக்கும் என்பதை அங்கீகரிக்கத் தவறியது, முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தையும் மக்கள் திரளையும் சார்ந்து இல்லாமலிருந்தது, முதலாளித்துவ மீட்சிக்கான அபாயத்தை வெறும் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஆயுதம் தாங்கிய தாக்குதல் என்பதாகக் குறுக்கியது, விவசாயத்தையும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும் மிகவும் மோசமாக புறக்கணித்துவிட்டு கனரகத் தொழிலுக்கு ஒரு தலைப்பட்சமான முக்கியத்துவம் கொடுத்தது, ரசியா மீது ஜெர்மானியத் தாக்குதலுக்கு முன்னதாக எச்சரிக்கையுடன் இல்லாமல் இருந்தது, எதிர்ப்புரட்சியாளர்களை ஒடுக்குவதற்காக 1930-ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட களையெடுப்பின் போது அதை அளவுக்கு அதிகமாக விரிவாக்கியது ஆகியனவாகும்.

இந்நூலில், ஸ்டாலினைப் பற்றிய மாவோவின் விமர்சனம் ரசியாவை தொழில் மயமாக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட முறைகளின் அடிப்படையையே தாக்குகிறது. இதன் காரணமாக அவை ரசியாவைப் பற்றிய ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மார்க்சிய ஆய்வை நமக்கு அளிக்கிறது. அவை, இனி எதிர் காலத்தில் சீனாவின் அதிகாரப் பூர்வமான கண்ணோட்டத்துடன் இணைக்கப்படலாம்; மேலும், இது தற்போது சீனாவுக்கு வெளியில் உருவாகிக் கொண்டிருக்கும் ரசியா பற்றிய சரியான மார்க்சிய புரிதலுக்குக் கூடத் துணைபுரிவதாக அமையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாபெரும் விவாதத்தில் இருந்து....

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் ஸ்டாலின் மீது வைக்கப்பட்ட விமர்சனம், கொள்கை மற்றும் முறை ஆகிய இரண்டிலும் தவறானது.

ஸ்டாலினின் வாழ்க்கை, ஒரு சிறந்த மார்க்சிய—லெனினியவாதியினுடையதும், ஒரு சிறந்த பாட்டாளிவர்க்கப் புரட்சியாளருடையதுமாகும். லெனின் மறைவுக்குப் பின் முப்பது ஆண்டுகள் ஸ்டாலின்தான் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ரசிய அரசாங்கம் ஆகிய இரண்டிற்கும் முன்னணித் தலைவர். அது மட்டுமல்ல, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் அங்கீகரிப்பட்ட தலைவர்; உலகப் புரட்சியின் வழிகாட்டி. அவருடைய வாழ்க்கைக்காலத்தில், அவர் சில கடுமையானத் தவறுகளைச் செய்தார். ஆனால், அவருடைய மாபெரும் சாதனைகளோடு ஒப்பிடும்போது அவருடைய தவறுகள் இரண்டாம்பட்சமானவையே.

ரசிய நாட்டின் வளர்ச்சிக்கும் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கும் ஸ்டாலின் மாபெரும் சேவைகள் புரிந்துள்ளார். ஏப்ரல் 1956-ல் வெளியிடப்பட்ட ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவம் பற்றி'' என்ற எமது கட்டுரையில், நாங்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம்:

''லெனின் மறைவுக்குப் பின் கட்சி, அரசுஆகியவற்றின் முதன்மைத் தலைவராக இருந்த ஸ்டாலின், மார்க்சிய-லெனினியத்தை ஆக்கப்பூர்வமாக நடைமுறைப்படுத்தி செழுமைப்படுத்தினார்; மக்களின் விருப்பங்களையும் எதிர்பார்ப்புகளையும் பிரதிபலித்தார். லெனினிய பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்காக அதன் எதிரிகளான டிராட்ஸ்கியவாதிகள் ஜினோவிஸ்ட்டுகள் மற்றும் பிற முதலாளி வர்க்க ஏஜெண்டுகளுடனான போராட்டத்தில் தன்னை மிகச் சிறந்த மார்க்சிய-லெனினிய போராளியாக நிரூபித்தார். ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிற தலைவர்களுடன் இணைந்து ரசியாவைத் தொழில்மயப்படுத்துவதிலும், விவசாயத்தைக் கூட்டுறவுமயமாக்குவதிலும் லெனினின் வழிமுறையைக் காத்து நின்றதால், ரசிய மக்களின் ஆதரவைப் பெற்று, வரலாற்றில் ஒரு முக்கியப் பங்காற்றினார். இந்த வழிமுறையைப் பின்பற்றி ரசிய கம்யூனிஸ்ட் கட்சி சோசலிசத்தின் வெற்றியை நிலைநாட்டியது. ஹிட்லருக்கு எதிரான யுத்தத்தில் ரசியநாடு வெற்றி பெறுவதற்கான நிலைமைகளை உருவாக்கியது. ரசிய மக்களின் இந்த வெற்றிகள், உலகத் தொழிலாளி வர்க்கத்தினுடைய, எல்லா முற்போக்கு மனிதகுலத்தினுடைய நோக்கங்களுடன் ஒன்றுபட்டன. எனவே, உலகம் முழுவதும் ஸ்டாலினுடைய பெயர் கவுரவிக்கப்பட்டது இயற்கையே'' [1]

1. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று படிப்பினைகள், ஆங்கிலப் பதிப்பு, பீகிங், 1964, பக்-7.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்டாலினுடைய தவறுகளை விமர்சனம் செய்வது அவசியம்தான். ஆனால், தோழர் குருச்சேவ் 20-வது காங்கிரசுக்கான தனது ரகசிய அறிக்கையில் ஸ்டாலினை முற்றாக மறுதலித்துவிட்டார். இவ்வாறு செய்ததன் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை இழிவு செய்தார்; சோசலிச முறையையும், மாபெரும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியையும், மாபெரும் ரசிய நாட்டையும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தையும் இழிவுபடுத்திவிட்டார். நேர்மையான, தீர்க்கமான, ஆய்வினை மேற்கொள்வதிலும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்று அனுபவத்தைத் தொகுப்பதிலும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்க கட்சி கடைப்பிடிக்க வேண்டிய விமர்சன-சுயவிமர்சன முறையைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அவர் ஸ்டாலினை ஒரு விரோதியாகப் பாவித்தார்; எல்லா தவறுகளுக்குமான பழியையும் ஸ்டாலின் மீதே சுமத்தினார்.

குருச்சேவ் தன்னுடைய ரகசிய அறிக்கையில் தீயநோக்குடனும் மக்களிடையே தவறான கருத்துக்களை உருவாக்கும் நோக்குடனும் ஸ்டாலினைப் பற்றி ஏராளமான பொய்களைக் கூறியுள்ளார். ஸ்டாலினுக்கு 'குரோதமனோபாவம்' உண்டு என்றும், ''இரக்கமின்றி ஆணவமாக''ச் செயல்பட்டார் என்றும், மக்கள் மீது ''அடக்குமுறை பயங்கரவாதத்தை''க் கட்டவிழ்த்து விட்டார் என்றும், ''தேசத்தையும் விவசாயத்தையும் திரைப்படங்களின் மூலம் மட்டுமே அறிந்தவர்'' என்றும், ''ஒருகோளத்தின் மீது நின்று யுத்த நடவடிக்கைகளைத் திட்டமிட்டார்'' என்றும், ''ஸ்டாலினின் தலைமை, ரசிய சமூக வளர்ச்சிப் பாதையின் பெரும் தடைக்கல்லாக மாறிவிட்டது'' என்றும் பலவாறான குற்றச்சாட்டுக்களை வீசியுள்ளார். அனைத்து உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளையும் எதிர்த்த உறுதியான போராட்டத்தில் மக்களை வழிநடத்தி சோசலிச மாற்றத்திலும், சோசலிச கட்டுமானத்திலும் யார் பெரும் வெற்றிபெற்றாரோ, உலகின் முதல் சோசலிச நாட்டினைப் பாதுகாப்பதிலும், உறுதிப்படுத்துவதிலும் பாசிச எதிர்ப்பு யுத்தத்தில் மகத்தான வெற்றி ஈட்டுவதிலும், யார் ரசிய மக்களை வழிநடத்தினாரோ யார் மார்க்சிய—லெனினியத்தை வளர்த்தெடுத்துப் பாதுகாத்தாரோ, அந்த ஸ்டாலினின் மகத்தான செயல்களை எல்லாம் குருச்சேவ் முற்றாகத் துடைத்தெறிந்து விட்டார்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது காங்கிரசில் ஸ்டாலினை முற்றாக மறுப்பதின் மூலம் அவர் வளர்த்தெடுத்துப் பாதுகாத்த மார்க்சிய—லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் குருச்சேவ் மறுக்கிறார். அதே காங்கிரசில்தான் குருசேவ் தன்னுடைய அறிக்கையில், பல கொள்கை பற்றிய பிரச்சினைகளில் மார்க்சிய—லெனினியத்தை மறுதலிக்கத்தொடங்கினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதலாளித்துவத்தின் பெருந்தோல்வி! அழுகும் அமெரிக்காவே சாட்சியம்!

ரஷ்யாவின் அரண்மனைப் புரட்சி தோற்றதும் கம்யூனிசத்திற்கு எதிரான பிரச்சாரங்கள் உலகெங்கும் தலைதூக்கியுள்ளன. முதலாளித்துவ அறிஞர்களும் - அறிவு ஜீவிகளும் - பத்திரிக்கையாளர்களும் முதலாளித்துவ ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும், சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தையும் தூக்கிப் பிடித்து ' சர்வரோக நிவாரணி'' என்கிறார்கள்; ''அணையா ஜோதி'' என்கிறார்கள். ''சோசலிச பொருளாதார கட்டுமானம் தோற்றுவிடட்து; காலாவதியாகி விட்டது'' என ரஷ்யாவையும் ''முதலாளித்துவ சுதந்திர சந்தைப் பொருளாதாரம்தான் நிலையானது; நீடித்தது; பிரச்சினையில்லாமல் முன்னேறக் கூடியது'' என மேலை நாடுகளையும் குறிப்பாக அமெரிக்காவையும் கைகாட்டி உரத்துக் கூச்சலிடுகிறார்கள்.

ரஷ்யாவில் கடந்த 35 ஆண்டுகளாக இருந்தது சோசலிச பொருளாதாரமும் அல்ல; சோசலிச விஞ்ஞானம் தோல்வியடையாது என்பதும் ஒருபுறம் இருக்கட்டும். இன்று அவர்கள் தூக்கிப் பிடிக்கும் முதலாளித்துவ சுதந்திர சந்தைப் பொருளாதாரம் எப்படிப்பட்டது? நிலையானதா? நீடித்ததா? அமெரிக்காவின் பொருளாதார நிலையைப் பார்த்தாலே இதற்குரிய பதில் கிடைத்து விடுகிறது.

அமெரிக்காவின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றிருப்பதற்கு அதன் வங்கித் துறையே ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. 2200 கோடி டாலர் சொத்துடைய 28 அமெரிக்க வங்கிகள் லாபமின்றி இயங்குகின்றன. 4300 கோடி 'டாலர்' சொத்துடைய 45 வங்கிகள் மூலதன விகிதாச்சாரப்படி 3% நட்டத்தில் இயங்குகின்றன. 92,600 கோடி டாலர் சொத்துடைய 150 வங்கிகள் 6% வரை நட்டமடைந்து செயல்படுகின்றன. 70,000 கோடி 'டாலர்' சொத்துடைய 15 பெரிய வங்கிகளில், 13 வங்கிகள் நட்டத்திலிருப்பதோடு அதன் சொத்து மதிப்பு குறைந்து கடன் அதிகரித்துள்ளது.

அமெரிக்க ஐக்கிய குடியரசின் இன்சூரன்ஸ் முதலீட்டு கம்பெனி (FDIC) மோசமான நிதி நிலையிலேயே இயங்கி வருகிறது. இன்று FDIC, 700 கோடி டாலரை செலவு செய்து 221 வங்கிகளை இழுத்து மூடிக் கொண்டுள்ளது.

உலகப் போலீசுக்காரனாக விளங்கும் அமெரிக்காவின் ராணுவச் செலவு மேலும் மேலும் பூதாகரமாகிக் கொண்டிருக்கிறது. 'நேட்டோ' ராணுவ ஒப்பந்த நாடுகளில் ஒன்றான அமெரிக்கா பிற 15 நாடுகளின் மொத்த ராணுவச் செலவைக் காட்டிலும் 40 சதவிகிதம் அதிகம் செலவழிக்கிறது. இதை பிறநாடுகள் தமக்கு சாதகமாக்கிக் கொண்டு ராணுவத்தைப் பலப்படுத்துவது - பாதுகாப்புப் பற்றி அதிகம் கவலைப்படாமல் உற்பத்தியில் கவனம் செலுத்தி வளர்ந்து வருகின்றன. அமெரிக்காவின் உற்பத்தித் துறையோ மேலும் மேலும் சுருங்கிக் கொண்டிருக்கிறது.

அறிவியல் - தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளில் முன்னணியில் இருந்த அமெரிக்கா இன்று பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது. அதிநவீன தொழில் நுட்ப பொருள் உற்பத்தியே - புதிய கண்டுபிடிப்புகளே இன்றைக்கு அனைத்தையும் தீர்மானிக்கும் காரணியாக மாறி வருகிறது. இதில் ஜப்பான் இன்று ஆதிக்கம் பெற்றுள்ளது. அதி நவீன தொழில் நுட்ப பொருள் உற்பத்திக்கு அடிப்படை தேவையான சிலிகான் துண்டை ஜப்பான்தான் பெருமளவு தயாரிக்கிறது. உலக சந்தையில் சிலிகான் துண்டு வர்த்தகத்தை 48.6 சதவிகிதத்தை ஜப்பான் கட்டுப்படுத்துகிறது. அமெரிக்காவோ 38.8 சதவிகிதத்தையே கட்டுப்படுத்துகிறது. இத்துறையில் ஜப்பான் தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் இருப்பதால் இன்று அமெரிக்கா புதிய வகை விஞ்ஞான முன்னேற்றத்திற்காக ஜப்பானிடம் கையேந்தி நிற்கிற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அமெரிக்காவின் உற்பத்தி பெருமளவிற்கு அந்நிய நாடுகளையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பாக ஜப்பான், ஜெர்மனை சார்ந்திருக்கிறது.

உலகளவில் மூலதனத்தைக் கொட்டி அந்நிய நாடுகளைச் சுரண்டி மேலாதிக்கம் செலுத்திவரும் அமெரிக்காவின் பொருளாதாரம் படுகுழியில் விழுந்துள்ளதற்கு இன்னொரு காரணம், அமெரிக்காவை அந்நிய நாடுகள் குறிப்பாக ஜப்பான், ஜெர்மன் சுரண்டி விடுகின்றன. அமெரிக்காவின் உற்பத்தித் துறை, கட்டுமானத் துறை (ரியல் எஸ்டேட்) கருவூல கடனீட்டுப் பத்திரங்கள் ஆகியவற்றை அந்நிய மூலதனம் பெருமளவிற்கு தன்வசப்படுத்திக் கொண்டுள்ளன. அந்நிய மூலதனத்தால் அமெரிக்காவின் கடன், வட்டி, பற்றாக்குறை அதிகரிப்பதுடன் லாபம் பெருமளவிற்கு வெளியேறுகிறது. 1987-ல் அமெரிக்கா அந்நிய நாடுகளில் வைத்திருந்த மூலதனம் 117 கோடி டாலர்! ஆனால், அதே ஆண்டில் அமெரிக்காவில் 154 கோடி டாலர் மூலதனம் அந்நிய கம்பெனிகளின் கட்டுப்பாட்டிலிருந்தன. இந்நிலை வருடந்தோறும் வளர்ந்து கொண்டுதான் உள்ளது.

அமெரிக்க பட்ஜெட்டில் பற்றாக்குறை ஆண்டுதோறும் கட்டுக்கடங்காமல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இதை ஈடுகட்ட கருவூல கடனீட்டுப் பத்திரங்களை அமெரிக்கா வெளியிடுகிறது. 1980-ன் தொடக்கத்தில் நடப்பு கணக்கில் ஏற்பட்ட பற்றாக்குறையை ஈடுகட்ட இதுபோன்று கருவூல கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்ட அமெரிக்கா, நாளடைவில் அதாவது 1980-ன் மத்தியில் மூலதனத்திலேயே பற்றாக்குறை ஏற்பட்டு கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டது. 1988-ன் கணக்குப்படி 17% கடனீட்டுப் பத்திரங்களையும் 12% உற்பத்திக்குரிய சொத்தையும் அந்நிய மூலதனம் கைவசப்படுத்தியிருந்தது. இந்த விகிதாச்சாரம் மேலும் மேலும் வளர்ந்ததன் விளைவாக இன்று அமெரிக்காவின் பொருளாதாரத்தையும், மூலதன சந்தையையும், அந்நிய மூலதனம் கட்டுப்படுத்துகிறது. "அந்நிய மூலதனத்தின் விருப்பப்படி ஆடும் பிணைக் கைதியாகிவிட்டது, அமெரிக்கப் பொருளாதாரம்! இந்நிலை தொடர்ந்தால் பங்கு சந்தையில் கடுமையான மோதலை தூண்டிவிடும்" என்கிறார், அமெரிக்காவின் பிரபல பொருளாதார நிபுணர் இ.பிரட் பெர்ஸ்டன்.

அமெரிக்காவின் வர்த்தகத்திலும் அந்நிய கம்பெனிகளே செல்வாக்கு செலுத்துகின்றன. அமெரிக்க கம்பெனிகளைக் காட்டிலும் அமெரிக்காவில் உள்ள அந்நிய கம்பெனிகள் கச்சாப் பொருட்களை அதிகம் இறக்குமதி செய்கின்றன. அந்நிய கம்பெனிகள் தமது லாபத்தில் 80 சதவிகிதத்தை அமெரிக்காவிலிருந்து தமது தாய்க் கம்பெனிகளுக்கு கடத்துகின்றன. அமெரிக்காவின் வியாபார - வர்த்தக பற்றாக்குறைக்கு பாதியளவு காரணம், இந்த அந்நியக் கம்பெனிகளின் இறக்குமதியே ஆகும். இதேபோல் அமெரிக்காவின் ஏற்றுமதியும் படுவீழ்ச்சியை சந்தித்துள்ளது. அந்நிய நாடுகளைச் சுரண்டுவதன் மூலமே தனது பொருளாதாரத்தின் நாடியை பிடித்து வைத்திருக்கிறது. 1985-ன் கணக்குப்படியே அந்நிய நாடுகளிலுள்ள அமெரிக்க பன்னாட்டு தொழிற் கழகங்களின் ஏற்றுமதி அளவு 70,400 கோடி டாலர்! அதே பொழுதில் அமெரிக்கா, 21,600 கோடி டாலர் அளவே தன் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்தது!

அமெரிக்காவின் கச்சாப் பொருள் உற்பத்தியும் சுருங்கிப் போய் அந்நிய நாடுகளை சார்ந்திருக்கிற நிலையை எய்திவிட்டது. இன்று அமெரிக்கா வியாபார சாதனங்கள், மின் மற்றும் மின்னணு சாதனங்கள், அறிவியல் உபகரணங்கள், விவசாயக் கருவிகள் முதலியவற்றை ஏற்றுமதி செய்வதை விட அதிக அளவு இறக்குமதி செய்கிறது. நாட்டின் தேவை ஒருபுறம் விரிந்து கொண்டே போவதும், மறுபுறம் பொருள் உற்பத்தியளவு சுருங்கிக் கொண்டே போவதும் நீண்டு கொண்டே போவதைக் கண்டு செய்வதறியாது விழிபிதுங்கி நிற்கிறது அமெரிக்கா. 1979-ல் 600 கோடி டாலர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அளவிற்கு வீட்டு உபயோகப் பொருட்களைத் தயாரித்த அமெரிக்கா, 1987-ல் 200 கோடி டாலர் அளவே தயாரித்தது. அதே சமயம் தேவை எதிர்மறையாக இருந்தது.

இவையன்றி அமெரிக்காவின் சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்குரிய அரசு ஒதுக்கீட்டையும் குறைத்துக் கொண்டே வருகிறார்கள் ஆட்சியாளர்கள். 1980- லிருந்து 88-க்குள் கல்விக்கென ஒதுக்கிய நிதியை 63% குறைத்துவிட்டது அமெரிக்க அரசு. 1981-88-க்குள் வீட்டு வசதி துறைக்கு உரிய தொகையில் 81% வெட்டி விட்டது. சுற்றுப்புறச் சூழலுக்கு செலவழித்த தொகையை பத்தாண்டுகளில் (1978 - 88) பாதியாக்கிவிட்டது. இதேபோல் தொடர்ந்து உற்பத்தியை குறைப்பதாலும், ஆலைகளை இழுத்து மூடுவதாலும் தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் குறைத்து வருகிறது. மேலும் அமெரிக்காவின் சமூக உறவு, குடும்ப உறவு, தனி மனித ஒழுக்கம் முதலான அனைத்தும் சீரழிந்து கிடப்பதை உலகமே அறியும்!

அமெரிக்காவில் முன்னேற்றப் பாதையில் இருப்பது ஆயுத உற்பத்தியும் போதைப் பொருள் விற்பனையும்தான்! அமெரிக்காவில் பொருள் உற்பத்தி - வர்த்தகத்தின் மூலதனத்தைக் காட்டிலும் ஆயுத உற்பத்தியும் மற்றும் போதைப் பொருள் விற்பனையில் புரளும் மூலதனம் அதிகரித்து விடுமோ என அவர்களே (?) அஞ்சுகிறார்கள். அமெரிக்காவிலுள்ள வங்கிகள் பல போதைப் பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல், கள்ளப் பணக்கடத்தல் முதலானவற்றிற்கே ரகசியமாக முன்னுரிமை கொடுத்து சேவை புரிகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், அமெரிக்காவின் பொருளாதாரம் இராணுவ - ஆயுதப் பொருளாதாரமாகவும், யூகப் பொருளாதாரமாகவும் - சூதாட்டப் பொருளாதாரமாகவும் மாறிவிட்டது. முதலாளித்துவ கட்டமைப்புக்கே உட்படாமல் - முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளின் கற்பனைக்கே எட்டாமல் தன்னை அன்னியப் படுத்தி நிற்கிறது. முதலாளித்துவ சுதந்திர சந்தைப் பொருளாதாரம் இப்படி 1960 வாக்கில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டபோது அமெரிக்க ஆட்சியாளர்கள் ஏற்கனவே வகுத்த அமைப்பை மறு ஒழுங்கு செய்ய வேண்டி நேர்ந்தது. அதாவது, 'யூகப் பொருளாதாரம்' திட்டமிடப்பட்ட பொருள் உற்பத்திக்கு நேரெதிரான அராஜகமான சூதாட்ட முறையாகும். அன்று பொருள் உற்பத்தியை பெருமளவில் முடக்கி எண்ணற்ற தொழிலாளர்களை வீதியில் வீசினார்கள். 'யூக மூலதனத்திற்கு அகலக் கதவு திறந்து விட்டார்கள். பங்குசந்தை சூதாட்டமும், போதைப் பொருள் வியாபாரமும் ஆயுதக் கடத்தலும் பெருகியது. இன்று இவை அமெரிக்கப் பொருளாதாரத்தை ஆட்டுவிக்கும் பேய்களாக மாறிவிட்டன.

— இப்படி மரணப் படுக்கையில் வீழ்ந்து மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறது, அமெரிக்கா! அமெரிக்காவின் ஆதிக்க வெறியும், யுத்த வெறியுமே இதற்கான முழுக் காரணம். உலகையே தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஆதிக்க வெறி பிடித்து அலைந்தது. பிற நாட்டின் உள்நாட்டு விவகாரங்களிலும் அத்துமீறி தலையிட்டது. தலையாட்டாத ஆட்சியாளர்களின் தலைகளையெல்லாம் பல சதிகளை செய்து வெட்டி வீழ்த்தியது. பல நாடுகளில் ராணுவ ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தியது. இதற்காக யாரையும் பயன்படுத்த தயங்கவில்லை. அனைத்து ஒழுங்கு முறைகளையும் மீறியது. பல நாடுகளின் கிரிமினல் கும்பலுக்கும் பிரிவினை சக்திகளுக்கும் தனது அடிவருடி குழுக்களுக்கும் ரகசியமாக ஆயுதங்களைக் கொடுத்து தூண்டிவிட்டது. தமது ஆதிக்கத்திற்கு எதிராக போராடுபவர்களிடையே போதைப் பொருள் - ஆபாசக் கலாச்சாரத்தைப் பரப்பி அடிமைகளாக்கியது. உலகையே தனது விரல் நுனியில் நிறுத்தி பார்ப்பதற்காக ''புதிய உலக ஒழுங்கமைப்பு'' திட்டத்தைப் போட்டுக் கொண்டு ராணுவத்திற்கும், விண்வெளிப் போருக்குமென ரகசியமாக பணத்தைக் கொட்டியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று இவையெல்லாம் சேர்ந்து அமெரிக்காவையே திருப்பித் தாக்குகின்றன; அமெரிக்கப் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணிகளாகி விட்டன. இது முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத விதி! தானே தனக்கு படுகுழி தோண்டிக் கொள்வதை முதலாளித்துவ பிரச்சாரகர்கள் என்னதான் கூச்சல் போட்டாலும் தடுக்க முடியாது! ● ராசு.

சொர்க்கபுரி அமெரிக்காவில் சுரங்கப் பாதை; இரவைக் கழிக்கும் வீடற்றோர்.



*நாட்டின் தேவை ஒருபுறம் விரிந்து கொண்டே போவதையும், மறுபுறம் பொருள் உற்பத்தியளவு சுருங்கிக் கொண்டே போவதையும் கண்டு செய்வதறியாது விழி பிதுங்கி நிற்கிறது அமெரிக்கா.*

*அமெரிக்காவின் பொருளாதாரம் இராணுவ - ஆயுதப் பொருளாதாரமாகவும் யூகப் பொருளாதாரமாகவும் - சூதாட்டப் பொருளாதாரமாகவும் மாறிவிட்டது. முதலாளித்துவ கட்டமைப்புக்கே உட்படாமல் - முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளின் கற்பனைக்கே எட்டாமல் தன்னை அன்னியப்படுத்தி நிற்கிறது.*

நன்றி: புதிய ஜனநாயகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எங்கள் குழந்தைகளை
வளர்ந்தவர்களாக்கிவிடும்.
ஒரு சிறிய குருவியினுடையதைப் போன்ற
அவர்களின் அழகிய காலையின்
பாதைகளின் குறுக்காய்
வீசப்படும் ஒவ்வொரு குருதிதோய்ந்த
முகமற்ற மனித உடலும்
உயிர்நிறைந்த
அவர்களின் சிரிப்பின் மீதாய்
உடைந்து விழும் மதிற்சுவர்களும்
காரணமாய்,
எங்களுடைய சிறுவர்கள்
சிறுவர்களாயில்லாது போயினர்.

நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித் துப்பாக்கிச் சன்னத்தின் ஓசை
எல்லாக்குழந்தைக் கதைகளினதும் அர்த்தத்தை
இல்லா தொழித்தது.

எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமங் கொட்டையில் தேர் செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்துபோனார்கள்.

அதன் பின்னர்
படலையை நேரத்துடன் சாத்திக் கொள்ளவும்
நாயின் வித்தியாசமான குரைப்பை இனம் காணவும்
கேள்விகேட்காதிருக்கவும்
கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கவும்,
மந்தைகள்போல எல்லாவற்றையும்
பழகிக்கொண்டனர்.

தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது.

யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
"வளர்ந்தவர்" ஆயினர்.

www.tamilarangam.net

தொடர்பு முகவரி :

இதழ் 3ல் அறிவிக்கப்படும்.

சந்தா அனுப்ப வேண்டிய தபால் கணக்கு

இல : 2.674.73 M

CENTRE DE CHEQUES
POSTAUX
75900 PARIS
FRANCE

சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | 60 | F.F |
| | 12 பிரதிகள் | 120 | F.F |
| ஐரோப்பிய நாடுகள் | 6 பிரதிகள் | 100 | F.F |
| | 12 பிரதிகள் | 200 | F.F |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | 225 | F.F |

வாசகர்களே!

உங்களது ஆக்கங்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

40 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் விமர்சனங்களை நிற்பாட்டிவிட்டு உங்களுடைய வாய்களை மூடி வைத்துக் கொள்ளவேண்டும்.

– யோகி
(L.T.T.E. மத்தியகுழு உறுப்பினர்)

தயவுசெய்து புலிகள் பற்றித் தப்பாக எழுதுவதை இன்றுடன் நிறுத்தும்படி மிக மன்னிப்பாக கேட்கிறேன். நீர் எங்கிருந்தாலும் உமது காதுச்சவ்வு விரைவில் துப்பாக்கிக்குண்டு பட்டு வெடித்து நீர் அமெரிக்காவை விட்டு உமது பிள்ளைகளையும் பிரிந்து மேலே போகும் நிலைக்கு ஆளாகிவிடாதீர்கள்.

– இந்துமதி

(சரிநிகர் பத்திரிகையில் வந்த கட்டுரைக்கு யாழ் வாசகர் எழுதிய கடிதத்திலிருந்து)